அக்டோபர் 2014 October | இதழ் 285 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION







அகிலன் நினைவு
கனடிய தபாற்தலை

24 வது ஆண்டில்
24th Year

Growing
with the
Community
ESTD-1991

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து **From the Editor**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம், ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

## பதவிப் பயம்

சட்டப்படியான காலத்துக்கும் முன்னராக, அடுத்தாண்டு ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த மகிந்த ராஜபக்ஷ நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இதனையடுத்ததாக நாடாளுமன்றத் தேர்தலும் நடத்தப்படுமென ஆளும் தரப்பின் நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நியுயோர்க்கிலும் கொழும்பிலும் சமகாலத்தில் இந்தத் தேர்தல்கள் தொடர்பான உத்தியோகப்பற்றற்ற அறிவித்தல்கள் வெளிவந்துள்ளது.

கொழும்பில் பிரதமர் டி. எம் ஜெயரத்தின கட்சிப் பிரதானிகளையும் தொகுதி அமைப்பாளர்களையும் அழைத்து, இரண்டு தேர்தல்களையும் விரைவில் எதிர்கொள்ள ஆயத்தமாகுமாறு கூறியுள்ளார்.

நியுயோர்க்கில் நடைபெற்ற ஐ, நா. பொதுச்சபைக் கூட்டத்தில் மகிந்த ராகபக்ஷ நிகழ்த்திய உரை, 'தேர்தல் வாசம்' கொண்டதாக இருந்ததையும், உலகத்துக்கு அரசியல் பாடம் போதிக்கும் தன்மையில் அமைந்ததையும் காணமுடிந்தது.

2005ம் ஆண்டில் முதற்தடவையாக ஜனாதிபதியாகத் தெரிவான மகிந்த, தமது ஆறு வருட ஆட்சி முடிவடைவதற்கு முன்னர் 2010ல் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்தி வெற்றி பெற்று, 2011ம் ஆண்டிலேயே பதவியேற்றார்.

இரண்டு தடவைகள் மட்டுமே ஒருவர் ஜனாதிபதியாக இருக்க முடியுமென்ற சட்டத்தைத் திருத்தியமைத்து, இப்போது மூன்றாம் தடவையாகவும் போட்டியிட முன்வந்துள்ளார். முன்னரைப்போன்று இந்தத் தேர்தலையும் ஆறு ஆண்டுகள் முடிவதற்கு முன்னர் நடத்திவிட அவர் விரும்புகின்றார்.

கடந்த மாதம் நடைபெற்ற ஊவா மாகாண சபைத் தேர்தலில் மயிரிழையில் பெற்ற வெற்றி, தமது கட்சியின் எதிர்காலம் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதோடு தமது கதிரையும் ஆட்டம் காணுவதாக அவர் நினைப்பது தெரிகிறது. இந்த அச்சம் நியாயமானது.

இதன் வெளிப்பாடாகவே அடுத்த சில மாதங்களுக்குள் ஜனாதிபதித் தேர்தலையும், நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்திவிட வேண்டுமென அவர் விரும்புவதை நோக்க முடிகின்றது.

சகல அரச இயந்திரங்களையும் முழுமையாகப் பயன்படுத்தி எப்படியாவது மீண்டும் ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றிவிட வேண்டுமென்பதற்காக எதனையும் செய்வதற்கு ராஜபக்ஷ சகோதரர்கள் தயாராகவுள்ளனர்.

கோதபாயவின் படைபலமும், பஸிலின் பணபலமும், மகிந்தவின் ஆட்பலமும் இணைந்து இயங்கும் பட்சத்தில் அவர்கள் விரும்பும் முடிவு சாத்தியமாகும் வாய்ப்பு நிரம்பவே இருக்கிறது. ஆனால், எதிர்பாராதவிதமாக அடி சறுக்குமானால்.....

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அண்மைய எச்சரிக்கையில் கூறப்பட்டவாறு, இராணுவ ஆட்சி அங்கு பிரகடனமாகலாம்.

அப்படியான ஒரு நிலை உருவாகுமானால், இலங்கையின் தலைவராக முடிசூடப்போவது மகிந்தவா? கோதபாயவா?

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto &
Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல் TAMILS' INFORMATION

## 24வது ஆண்டு பூர்த்தி மலருக்கு ஆக்கங்களை இப்போது அனுப்பலாம்!

கடந்த 285 மாதங்களாகக் கனடாவில் மாதந்தவறாது வெளிவருகின்ற 'தமிழர் தகவல்', எதிர்வரும் ஜனவரி மாதத்தில் தனது 24வது ஆண்டினைப் பூர்த்தி செய்யவுள்ளது என்பதை எமது அபிமான வாசகர்களுக்கும் வணிகத்துறை ஆதரவாளர்களுக்கும் எழுத்தாள அன்பர்களுக்கும் மகிழ்ச்சி கலந்த பெருமையுடன் அறியத் தருகின்றோம்.

கனடியத் தமிழரின் அடையாளமாக மிளிர்கின்ற 'தமிழர் தகவல்', இந்த மண்ணின் மூத்த இதழியலாகவும், சர்வதேச ரீதியாக வசிப்பவர்களின் எழுத்துகளையும் நிகழ்வுகளையும் பதிவு செய்து வரும் தனித்துவ இதழாகவும் துறைசார் வல்லுனரால் மதிக்கப்படுகிறது.

புலம்பெயர் மண்ணில் 'அறிஞர்களையும் கலைஞர்களையும் வாழும்போதே சிறப்பித்து மதிப்பளிப்போம்' என்பதை ஒரு முன்னுதாரணமாக ஆரம்பித்து வைத்த பெருமையும் தமிழர் தகவலுக்கே உரியது.

ஒவ்வொரு ஆண்டின் பூர்த்தியையும் முன்னிட்டு நடைபெறும் விழாவில் பல்துறைசார் பிரமுகர்களுக்கு விருது வழங்கி, தங்கப் பதக்கம் சூட்டுவதோடு ஒட்டியதாக தமிழர் தகவல் ஆண்டு மலரும் வெளியிடப்படுவது வழக்கம்.

இந்த வரிசையில், 24வது ஆண்டு பூர்த்தி மலர் எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் வெளிவரவுள்ளது. முன்னைய ஆண்டுகளைப்போல சுமார் 160 பக்கங்களில் வெளிவரும் மலரில் ஆக்க இலக்கியங்களைத் தவிர, தகவல்சார் கட்டுரைகள் இடம்பெறும்.

ஆங்கிலம் அல்லது தமிழில் எழுதப்படும் கட்டுரைகளை எதிர்வரும் நவம்பர் 14ம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

மின்னஞ்சல்: tamilsinfo@sympatico.ca

தபால்: P.O.Box - 3, Station - F
Toronto, ON.
M4Y 2L4

### மனித உரிமைகள் ஆணைய அறிக்கையில்....

# புலம்பெயர்ந்த தமிழரின் செயற்பாடும் வடமாகாண சபையின் தீர்மானமும்

இலங்கையின் நிகழ்கால நிலைவரம் தொடர்பாகக் கடந்த மாதம் 22ம் திகதி ஐ.நாவின் மனித உரிமை ஆணையர் செயித் அல் ஹுசேன் வெளியிட்ட அறிக்கையொன்று இலங்கை அரசின் நடவடிக்கைகளையிட்டு கவலையும் அதிர்ச்சியும் அடைவதாகத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் குடிசார் அமைப்புகள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், பாதிக்கப்பட்டோருக்காகக் குரல் கொடுக்கும் அமைப்புகள், சர்வதேச விசாரணையை வலியுறுத்துவோர் மீது அரசாங்க அமைப்புகளால் விடுக்கப்பட்டு வருகின்ற அச்சுறுத்தல் கண்டு தாம் அதிர்ச்சியடைந்துள்ளதாக ஆணையர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் ஐ. நா. மனித உரிமை ஆணையத்தில் நிறைவேற்றப்பட்ட மூன்றாவது தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டவாறு, வாய்மூல அறிக்கையின் முற்கூட்டிய விபரங்கள் செப்டம்பர் 22ம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் 25ம் திகதி அவையில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

ஐ. நா மனித உரிமை ஆணையம் விரும்பும் ஒரு சர்வதேச விசாரணை நடைபெறுவதைச் சிக்கலாக்கும் நோக்கிலேயே அச்சமூட்டக்கூடிய சூழல் இலங்கையில் உருவாக்கப்படுவதாக இந்த அறிக்கை கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தை வலியுறுத்திவரும் செயற்பாட்டாளர்கள் மீது இலங்கையிலுள்ள ஊடகங்கள் வாயிலாக தொடர் தாக்குதல்கள் நடத்தப்படுவதையும் இந்த அறிக்கை விமர்சித்துள்ளது. ஆங்கிலத்தில் மொத்தம் பத்துப் பக்கங்களில், ஐம்பத்திமூன்று பந்திகளைக் கொண்டதாக இந்த முற்கூட்டிய அறிக்கை அமைந்துள்ளது.


ஜெனிவா தீர்மானத்துக்கமைய நடைபெறும் இலங்கை மீதான சர்வதேச விசாரணை தொடர்பாக, வடமாகாண சபையினதும் புலம்பெயர்ந்த தமிழர்களின் செயற்பாடுகள் பற்றியும் இரு வேறு பந்திகளில் குறிப்பிடப்பட்டிருப்பதை இங்கு முக்கியமாகப் பார்க்கலாம். மனித உரிமை ஆணையம் நிறைவேற்றிய தீர்மானத்தை ஆதரித்து கடந்த ஏப்ரல் 28ம் திகதி வடமாகாண சபை மூன்று தீர்மானங்களை நிறைவேற்றியதென்று, இந்த அறிக்கையின் ஆறாம் பந்தி குறிப்பிடுகின்றது. அதன் வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது:

"The Northern Provincial Council had previously adopted three resolutions on 28 April supporting the Human Rights Council resolution.

16 தமிழர் அமைப்புகளையும் 424 தனியாட்களையும் இலங்கை அரசு தடைசெய்தது பற்றிக் குறிப்பிட்டுள்ள இந்த அறிக்கை, இத்தடையானது விடுதலைப் புலிகளை மட்டுமன்றி மனித உரிமை ஆணையத்தினது செயற்பாடுகளுடனும் சர்வதேச மனித உரிமைகள் பொறிமுறைகளுடனும் இணைந்து தீவிரமாகப் பணியாற்றி வரும் பல புகலிடத் தமிழரின் பிரதான அமைப்புகளையும் உள்ளடக்கியுள்ளது என்பதைப் பின்வரும் வாசகங்கள் வழியாகத் தெரியப்படுத்தியுள்ளது:

"...the Government also announced the proscription of 16 tamil organisations and 424 individuals.....These included not only the LTTE, but many mainstream Tamil diaspora organisations which have been actively engaged with the Human Rights Council and International human rights mechanisms".

வடமாகாண சபையின் தீர்மானங்கள் தொடர்பாகவும், புகலிடத் தமிழர் அமைப்புகளின் பங்களிப்புப் பற்றியும் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை (வரவேற்று) குறிப்பிடுவதானது, தொடர்ந்தும் இந்த நிறுவனங்களும் வேறு அமைப்புகளும் இவ்வழியே தங்கள் பயணத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றது.



இராணுவம் தொடர்ந்து தமிழர் காணிகளை ஆக்கிரமித்து வருவது, சிவில் நிர்வாகம் ராணுவமயமாகி வருவது, நீதிமன்றத் தீர்ப்புகள் உதாசீனம் செய்யப்படுவது, சிறுபான்மை இனங்களின் மதசுதந்திரம் மறுக்கப்படுவது, அவர்களின் வழிபாட்டுத் தலங்கள் தாக்குப்படுவது தொடர்பாகவும் அறிக்கை விமர்சிக்கின்றது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

தற்போது கனடாவில் ஆரம்பமாகியுள்ள இலையுதிர் காலத்தில் முன்னைய ஆண்டுகளைப் போலன்றி வெப்பநிலை கூடுதலாக இருக்குமென்று காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. முக்கியமாக இந்த மாதம் (அக்டோபர்) வழக்கத்திலும் கூடுதலாக வெப்பமிருக்கலாம். இந்த வருடக் கோடை காலத்தில் ரொறன்ரோவில் மூன்று நாட்கள் மட்டுமே வெப்பம் முப்பது பாகை செல்சியஸைத் தாண்டியதுடன் மழைவீழ்ச்சி அதிகமாக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தொலைக்காட்சிகளின் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்குக் கனடியர்கள் ஒதுக்கும் சராசரி நேரம் குறைந்து வருவதாக ஆய்வொன்று தெரிவிக்கின்றது. இரண்டு வயதுக்கு மேற்பட்டவர்கள் கடந்தாண்டில் வாரமொன்றுக்கு சுமார் 28 மணித்தியாலங்களையே தொலைக்காட்சியைப் பார்ப்பதற்குச் செலவிட்டுள்ளனர். இணையங்களின் வழியாக நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவது இதற்குக் காரணமெனத் தெரியவருகின்றது. பணம் செலுத்தி தொலைக்காட்சி பார்ப்போர் தொகை கடந்தாண்டில் ஒரு லட்சம் குறைந்துள்ளது.

கடந்த சில வாரங்களாக அமெரிக்காவில் பரவி வந்த புதுவகையான சுவாச நோய் தற்போது கனடிய எல்லையைத் தாண்டி இங்கேயும் வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 'என்ரறோ வைரஸ்' எனப்படும் இந்நோய் பாடசாலைச் சிறார்களையே கூடுதலாகத் தாக்கி வருகின்றது. கனடாவின் மேற்குப் பகுதியில் அல்பேர்ட்டா, பிரிட்டிஷ் கொலம்பியா மக்கள் இந்நோயையிட்டு விழிப்பாக இருக்குமாறும், அடிக்கடி கைகளைக் கழுவுவது அவசியமானது என்றும் கேட்கப்பட்டுள்ளனர்

ஆர்ட்டிக் கடல் பகுதியில் சுமார் 160 ஆண்டுகளுக்கு முன்னர் காணாமற்போன பிரித்தானிய ஆய்வுக் கப்பலொன்று, கடல் அகழ்வாராய்ச்சியின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 'நோர்த் வெஸ்ட் பசேஜ்' எனப்படும் பகுதிக்கு 1845ல் 129 பேருடன் சென்றபோது காணாமற்போன இரண்டு கப்பல்களில் இது ஒன்றாகும். ஆர்டிக் பிரதேசத்தில் பனிப்பாளங்கள் இப்போது உருக ஆரம்பித்துள்ளதால் கனடா எடுத்த தேடுதல் முயற்சியால் ஒரு கப்பல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உலக வனவிலங்குகள் நிதியத்துகு நிதி சேகரிக்கவென கனடா தழுவிய சைக்கிள் பயணத்தை மேற்கொண்ட ரொறன்ரோவைச் சேர்ந்த கிரேம் லோடர் (23 வயது) என்ற இளைஞர் வாகன விபத்தொன்றில் மரணமாக நேர்ந்தது. மனிரோபாவிலுள்ள 'ட்ரான்ஸ் கனடா' என்னும் நெடுஞ்சாலையில் கடந்த மாத முதல் வாரம் இரவு வேளையில் வாகனமொன்று இவரை மோதியது. இறப்பதற்கு ஐந்து மணி நேரத்துக்கு முன்னர் தமது ஒளிப்படமொன்றை இவர் தமது முகநூலில் பதிவு செய்திருந்தார்.

இணையத் தளங்கள் ஊடாக விற்பனை செய்யப்படும் மருந்துகளையிட்டுப் பொதுமக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு ரொறன்ரோ பொலிசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஆய்வுத் தேவைகளுக்காக மட்டும் தயாரிக்கப்படும் சில மருந்து வகைகள் இணையத் தளங்கள் ஊடாக விற்பனை செய்யப்படுவதால் சிலர் அண்மையில் உயிரிழக்க நேர்ந்துள்ளது. இந்த வகை மருந்துகளில் ஒரு வகை போதைப் பொருளும் சில இரசாயனக் கலவைகளும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

ரொறன்தோவில் புற்று நோயுடன் வாழ்ந்து வருகின்ற சிறுவர்களுக்கான முகாமாக அமைந்துள்ள 'காம்ப் ட்றில்லியத்துக்கு' நிதி சேகரிக்கவென 16 வயதுச் சிறுமி ஆரம்பித்த மரதன் நீச்சல் சுமார் இரண்டு லட்சம் டாலர்களை அதற்குச் சேர்த்துக் கொடுத்துள்ளது. அனாலசி கார் என்ற இந்தச் சிறுமி 75 கிலோ மீட்டர் தூரமுள்ள ஒன்றாறியோ வாவியை நீந்திக் கடந்து நிதியைச் சேகரித்து வழங்கியுள்ளார். இவரது நீச்சல் நீர்ப்பரப்பு 1500 ஒலிம்பிக் நீச்சல் தடாகங்களுக்கு இணைவானதாகும்.

# ஜெயலலிதா குற்றவாளி!

## முதல்வர் பதவி பறிபோனது நான்காண்டுச் சிறையுடன் 100 கோடி ரூபா அபராதம்



66 கோடி ரூபா சொத்துக் குவிப்பு வழக்கில் தமிழக முதல்வராகவிருந்த ஜெயலலிதா குற்றவாளியெனக் கடந்த மாதம் 27ஆம் திகதி பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் அறிவித்தது. இதனால் உடனடியாகவே அவர் தமது முதல்வர் பதவியை இழந்தார். இவருக்கு நான்கு வருடச் சிறைத்தண்டனையும், நூறு கோடி ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்தத் தவறினால் மேலும் ஒரு வருடம் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென நீதிபதி மைக்கல் குன்ஹா அறிவித்தார்.

இத்தண்டனையை எதிர்த்து ஜெயலலிதா மேன்முறையீடு செய்வாரென அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் உடனடியாக ஜமீனில் வெளிவர நீதிமன்ற விடுமுறை இடம் கொடுக்காததால் நேரடியாக அவர் பெங்களூர் அகர்ஹரா சிறைக்கு அனுப்பப்பட்டார். அக்டோபர் 6ம் திகதி ஜமீன் மனு தாக்கலாகுமென இவரது வழக்கறிஞர்கள் தெரிவித்தனர். ஜமீனில் ஜெயலலிதா விடுதலையானாலும் மீண்டும் முதல்வர் பதவியை இவர் வகிக்க முடியாது. அத்துடன், அடுத்த பத்தாண்டுகளுக்குத் தேர்தலிலும் போட்டியிட முடியாது. ஆனாலும், இவரது அ.தி.மு.க தமிழக ஆட்சியிலிருப்பதற்கும் தேர்தல்களில் போட்டியிடவும் எந்தத் தடையுமில்லை.

1991 முதல் 1996 வரையான காலத்தில் வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துக் குவித்ததாக சுப்பிரமணியம் சுவாமியின் முறைப்பாட்டின் அடிப்படையில் தாக்கலான இந்த வழக்கு 18 ஆண்டுகளாக இழுபறியிலிருந்து வந்தது. இவ்வழக்கில் ஜெயலலிதாவுடன் குற்றம் சுமத்தப்பட்ட சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோருக்கும் நான்காண்டு காலச் சிறையுடன், தலா பத்துக் கோடி ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றொறன்ரோ நகரசபைகளின் தேர்தல் தமிழர் சிலர் தமக்குள் மோதும் களம்

ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல் இந்த மாதம் 27ம் திகதி நடைபெறவுள்ளது. நகர சபைகளின் உறுப்பினர்கள், மேயர்கள், பாடசாலைச் சபை உறுப்பினர்கள் இந்தத் தேர்தல்களின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

றொறன்றொ பெரும்பாகத்திலேயே மிகக்கூடுதலான தமிழர்கள் வாழ்வதால், அவர்களைப் பொறுத்தளவில் இந்தத் தேர்தல் மிக முக்கியமான ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது. இதனை நிரூபிக்கும் வகையில், இம்முறை றொறன்ரோ பெரும்பாக சபைகளுக்கான தேர்தல்களில் பெருமளவான தமிழர்கள் போட்டியிடுகின்றனர்.

றொறன்ரோ, மார்க்கம், மிசிசாகா, ஏஜக்ஸ் நகரங்களில் நடைபெறும் தேர்தல்களில் பாடசாலைச் சபை உறுப்பினர்கள், நகர சபை உறுப்பினர்கள் பதவிகளுக்கு மட்டுமன்றி நகர சபை (ஏஜக்ஸ் நகரம்) மேயர் பதவிக்கும் ஒரு தமிழர் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது.

மிகக்கூடுதலான தமிழ் இளையோர் பாடசாலைச் சபைகளுக்கான உறுப்பினர் போட்டியில் இறங்கியுள்ளனர். கனடாவில் முதலாவது வெற்றிபெற்ற தமிழ் அரசியல்வாதியான லோகன் கணபதி மீண்டும் தமது மார்க்கம் ஏழாம் வட்டாரத்தில் போட்டியிடுகிறார். ஒன்ராறியோ என். டி. பி. கட்சியின் தவிசாளரான நீதன் சண் றொறன்ரோவின் 42ம் வட்டார உறுப்பினர் பதவிக்குப் போட்டியிடுகிறார்.

முன்னைய ஆண்டுகளிலும் பார்க்கக் கூடுதலான தமிழ்ப்பெண் அபேட்சகர்கள் இந்த மாதத் தேர்தலில் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது. எழுத்தாளரும் ஒலிபரப்பாளருமான சிவவதனி பிரபாகான் 41ம் வட்டார உறுப்பினர் பதவிக்குப் போட்டியிடுகிறார்.

சில வட்டாரங்களில் ஒரே பதவிக்கு இரண்டு அல்லது மூன்று தமிழர்கள் எதிரும் புதிருமாகப் போட்டியிடுவது தவிர்க்கப்பட்டிருக்கலாம். இவர்கள் தமக்குள் போட்டியிட்டு வாக்குகளைப் பிளவுபடுத்துவது, வேறு அபேட்சகர்களை வெற்றிபெறச் செய்யும் சூழலை உருவாக்கலாமென அஞ்சப்படுகிறது.●

# எற்றோபிக்கோ வடக்கு வாக்குச் சீட்டில் போஃர்ட் குடும்பத்தினர் மூவரின் பெயர்







றொறன்ரோ நகரசபைக்கு இந்த மாதம் 27ம் திகதி நடைபெறவிருக்கும் தேர்தலில், எற்றோபிக்கோ வடக்கிலுள்ள வட்டார வாக்காளர்களுக்கு அபூர்வமான ஆச்சரியமொன்று காத்திருக்கின்றது. இவர்களுக்கு வழங்கப்படவுள்ள வாக்குச் சீட்டில் மூன்று போஃர்ட் பெயர்களை இவர்கள் காணமுடியும்.

ஒவ்வொரு வாக்காளரும் மேயர் பதவி, வட்டார உறுப்பினர் பதவி, அந்த வட்டார பாடசாலைச் சபை உறுப்பினர் பதவிகளுக்கென தனித்தனியாக மூவருக்கு வாக்களிக்கும் உரிமையுண்டு. எற்றோபிக்கோ வடக்கு 2ம் வட்டாரத்திலுள்ள வாக்காளர்களின் வாக்குச் சீட்டில் இந்த மூன்று பதவிகளுக்கும் மூன்று போஃர்ட் பெயர்கள் இடம்பெறுவதே ஆச்சரியம் தரும் விடயம்.

மேயர் பதவிக்கு தற்போதைய 2ம் வட்டார உறுப்பினர் டக் போஃர்ட் போட்டியிடுகிறார். 2ம் வட்டார உறுப்பினர் பதவிக்கு தற்போதைய மேயரும் டக் போஃர்ட்டின் சகோதரருமான றொப் போஃர்ட் போட்டியிடுகிறார். இவர்கள் இருவரதும் சகோதரியின் மகனும் போஃர்ட் சகோதரர்களின் மருமகனுமான மைக்கல் போஃர்ட் இதே வட்டார பாடசாலைச் சபை உறுப்பினர் பதவிக்குப் போட்டியிடுகிறார். இவருக்கு வயது 22 மட்டுமே.

இவர்கள் மூவரும் தேர்தலில் வெற்றி பெற்றால், றொறன்ரோ நகர சபையில் ஒரே குடும்பத்தின் மூவர் சமகாலத்தில் பதவி வகிக்கும் 'கின்னஸ்' சாதனை நிகழ்த்தப்படும்.●

# றொப் விலகினார்; டக் போட்டியில்!

றொறன்ரோ மேயர் போட்டியிலிருந்த தற்போதைய மேயர் றொப் போஃர்ட் புற்று நோய் தாக்கத்தின் காரணத்தால் போட்டியிலிருந்து விலகியுள்ளார். அரசியலிலிருந்து விலக முடிவெடுத்திருந்த 2ம் வட்டார உறுப்பினரான டக் போஃர்ட், தமது சகோதரரின் இடத்தை நிரப்புவதற்காக மேயர் போட்டியில் குதித்துள்ளார்.

# ஸ்கொட்லாந்து வாக்கெடுப்பில் பிரிவினை தோல்வி




ஐக்கிய ராஜ்யத்திலிருந்து (United Kingdom) ஸ்கொட்லாந்து பிரிந்து போவதா? வேண்டாமா? என்று கடந்த மாதம் 18ம் திகதி அங்கு நடத்தப்பட்ட கருத்தறியும் வாக்கெடுப்பில், பிரிவினைக்கு எதிராக 55.30 வீத வாக்குகளும், ஆதரவாக 44.70 வாக்குகளும் கிடைத்ததால், பிரிவினை தோல்வி கண்டது.

ஸ்கொட்லாந்திலுள்ள 32 உள்ளூராட்சிச் சபைகளில் கிளாஸ்கோ, டண்டி, வடலங்கன்ஷர், மற்றும் வெஸ்ட் ஆகிய நான்கு பிரதேசங்களில் மட்டும் பிரிவினைக்கு ஆதரவாக கூடிய வாக்குகள் கிடைத்தன. மற்றைய 28 பிரதேசங்களும் பிரிவினைக்கு எதிராக வாக்களித்தன. ஸ்கொட்லாந்தின் தலைநகரான எடின்பரோ வாக்காளர்களில் 61.10 சதவீதமானோர் பிரிவினைக்கு எதிராக வாக்களித்தது குறிப்பிடத்தக்கது.

இறுதி முடிவுகளின் படி பிரிவினைக்கு எதிராக 2001,925 பேரும், ஆதரவாக 1617, 989 பேரும் வாக்களித்ததால், 383,937 அதிக வாக்குகளால் பிரிவினை முயற்சி தோல்வி கண்டது. இதனையடுத்து ஸ்கொட்லாந்தின் முதல்வரும் பிரிவினைக் கோரிக்கையை முன்னெடுத்தவருமான அலக்ஸ் சால்மன்ட் தமது பதவி விலகலை அதிகாரபூர்வமாக அறிவித்தார்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# வெள்ளைக் கோட் உயர் இரத்த அழுத்தம்

வெள்ளைக் கோட் உயர் இரத்த அழுத்தம் என்பது வெள்ளைக் கோட் போடும் மருத்துவர்களுக்கு வரும் பிரஸர் வருத்தம் அல்ல. பிரஸர் எல்லோருக்கும்தான் வருகிறது. மருத்துவர்கள் என்ன விதிவிலக்கா? அவர்களுக்கும் வரலாம்தானே!

மருத்துவர்கள் முக்கியமாக மேலைத் தேய மருத்துவர்கள் தங்கள் கடமை நேரத்தின் போது பாரம்பரியமாக வெள்ளைக் கோட் அணிவார்கள். அது அவர்களது தொழில் சார்ந்த அடையாளமாகக் கருதப்பட்டது. ஆனால் இன்று காலம் மாறிவிட்டது. குட்டைப் பாவாடையுடனும், கட்டைக் காற்சட்டையுடனும் மருத்துவர்களை காணும் காலமாகிவிட்டது.

வெள்ளைக் கோட் உயர் இரத்த அழுத்தம்

நீங்கள் என்ன கூடச் சொல்லுறிங்கள். இப்ப வரக்கு முதல்தான் வீட்டிலை டிஜிடல் மீற்றரில் பார்த்தனான் 130/80 தான் இருந்தது" என்பார்கள்.

இது சந்தையில் பேரம் பேசும் விடயமா? மருத்துவர் பார்க்கும்போது 140/90 இருந்திருக்கும். அளவிடும்போது மீற்றரில் காட்டுவதைத்தானே கூற முடியும்.

யார் பிழையாகச் சொல்கிறார்கள்.

அவர் சொன்னதும் சரிதான். மருத்துவர் சொன்னதும் சரிதான்.
ஒருவரது பிரஸர் அல்லது இரத்த அழுத்தம் என்பது எந்த நேரமும் ஒரு அளவில் இருக்கும் என்பதில்லை. வேலை, காலநேரம், சிந்தனை, மனஉளைச்சல், தூக்கம் போன்ற பல்வேறு நிலைகளின் போது அதில் சிறிய சிறிய மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கும். வீட்டிலிருந்து நடந்து வந்ததில் சற்று அதிகரித்திருக்கும்.

ஆனால் சிலருக்கு மருத்துவரிடம் செல்லும் போது அதிகரிப்பதுண்டு.

வெள்ளைக் கோட் உயர் இரத்த அழுத்தம் என்பது மருத்துவர்களிடம் செல்லும் போது சில நோயாளிகளுக்கு பிரஸர் அதிகரிப்பதையே குறிப்பிடுகிறது. ஆனால் வெள்ளைக் கோட்டு அணிந்த மருத்துவர்களிடம் மட்டுமல்லாது, எந்த மருத்துவரிடம் செல்லும் போதும் இத்தகைய நிலை சிலருக்கு தோன்றுகிறது.

மருத்துவர்கள் மட்டுமின்றி மருத்துவ மாதுக்கள், தாதிகள் போன்றோர் அளவிடும்போதும் இது நிகழலாம். அதாவது தமக்கு இயல்பான, தங்களுக்கு இணக்கமான சூழலாக அல்லாத மருத்துமனைச் சூழலில் அளவிடும்போது இரத்த அழுத்தம் அதிகரித்துக் காணப்படுவதையே அவ்வாறு குறிப்பிடுகிறார்கள்.

பிரஸரை இரண்டு அலகுகளில் குறிப்படுவார்கள் என்பதை அறிவீர்கள். சாதாரண பிரஸர் என்பதை 120/80 என்பார்கள்.

- இதில் மேலே உள்ளதை சிஸ்டலிக் (systolic) என்றும்
- கீழே உள்ளதை டயஸ்டலிக் (diastolic) என்றும் சொல்வார்கள்.

பொதுவாக வீட்டில் அளக்கும்போது மருத்துவரிடம் அளவிடுவதை விட சிஸ்டலிக் 10 குறைவாகவும் டயஸ்டலிக் குறைவாகவும் இருப்பதைக் காண முடியும். இன்னும் சிலரில் வித்தியாசம் சற்று அதிகமாகவும் இருக்கலாம்.

ஆனால் இந்த அளவு வித்தியாசமானது சில தருணங்களில் 30 வரை அதிகரிக்கக் கூடும்.

இதற்குக் காரணம் என்ன?

டாக்டர் எனக்கு படபடப்பாகக் கிடக்கு. பிரஸர் கூடக் காட்டப் போகுது என்று சொன்னபடியே அமர்ந்தார் ஒருவர். சாதாரண மனிதன் அல்ல. கற்றறிந்தவர், மற்றவர்களால் மதிக்கப்படும் ஒருவர். மாணவர்கள் அவர்முன் அடக்க ஒடுக்கமாக நிற்பார்கள். அவருக்கு மருத்துவர் முன் நிற்கும்போது நெஞ்சு படபடக்கிறது. அதனால் தனது பிரஸர் அதிகரிக்கப் போகிறது என்பதும் புரிந்திருக்கிறது.

ஆம் மனப்பதற்றம்தான் படபடப்பிற்கும் மருத்துவர் முன் பிரஸர் அதிகரிக்கப் போவதற்கும் காரணம் என்பதையும் அவர் அறிந்திருக்கிறார். இருந்தபோதும் அதிலிருந்து மீளும் வழி புரியவில்லை.

ஒருவரது பிரஸரானது எப்பொழுது மருத்துவரிடம் அளவிட்டாலும் அது 140/90mmHg ற்கு மேலிருந்து அதேநேரம் வீட்டில் அளவிடும் போது குறைவாக இருந்தால் மட்டுமே வெள்ளைக் கோட் உயர் இரத்த அழுத்தம் என அழைக்கப்படுகிறது.

இது எவரையும் பாதிக்கக் கூடிய விடயம்தான். இருந்தபோதும் அதிகம் காணப்படும் பிரச்சனை அல்ல. எனவே கட்டுரையைப் படித்தவுடன் எனக்கும் இதே பிரச்சனைதான் என எண்ணி உடனடியாக மருத்துவரிடம் ஓடாதீர்கள். அந்த நோய் பற்றிய எண்ணமும் அதனால் ஏற்படக் கூடிய மனஉளைச்சலும் உங்கள் பிரசரை சற்று அதிகரிக்கச் செய்துவிடலாம்.

பல தருணங்களில் ஒருவது பிரஸரானது உண்மையிலேயே அதிகரித்து இருக்கிறதா அல்லது அது வெள்ளைக் கோட் உயர் இரத்த அழுத்தம்தானா எனத் தீர்மானிப்பது மருத்துவர்களுக்கு சவாலான விடயமான இருப்பதுண்டு.
மருத்துவர்கள் இதை தங்களுக்குரிய பல்வேறு வழிகளைக் கையாண்டு தீர்மானிப்பதுண்டு.

ஒருவரது பிரஸரைப் அளவிடும்போது சற்று அதிகமாக இருந்தால், நோயாளியின் சிந்தனையை திசைதிருப்புவதற்காக வேறு விடயங்கள் பற்றி உரையாடலைத் திருப்புவார். அவர் மனப்பதற்றம் தணிந்திருக்கும் அந்நேரத்தில் கதையோடு கதையாக மீண்டும் பிரஸரை அளந்து சரி பிழையைக் கணிப்பார்கள்.

நிச்சயமாகக் கண்டறிய வேறு இரண்டு முறைகளைப் பயன்படுத்தலாம்.

வீட்டில் அளத்தல்

ஒருவர் தனது இரத்த அழுத்தத்தை கிரமமான முறையில் வீட்டில் அளவிட்டு பார்ப்பது ஒரு முறை. காலை மாலை இரவு என வேறு வேறு நேரங்களில் அளவிட்டு அவற்றை திகதி மற்றும் நேரவாரியாக குறித்து வைக்க வேண்டும். பின்னர் மருத்துவரிடம் செல்லும்போது அக்குறிப்பைக் காட்டினால் வெளியிடங்களில் பிரஸர் எவ்வாறு இருந்தது என்பதை மருத்துவர் விளங்கிக் கொள்ள உதவும்.

வீட்டில் பாரக்கும்போதும் பிரஸர் எப்படி இருக்குமோ என்ற பதற்றமின்றி இயல்பாக இருக்க வேண்டும். தனது பிரஸர் அளவுகளை ஒரு பதிவேடாகப் personal blood pressure record பேணுவது மிகவும் நல்லது. வெள்ளைக் கோட் உயர் இரத்த அழுத்தம் இருக்குமா என்ற சந்தேகம் உள்ளவர்களுக்கு இது அவசியம்.

ஆனால் பிரஸர் மிக அதிகமாக உள்ளவர்களுக்கும், அதில் அடிக்கடி ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுபவர்களுக்கும் இத்தகைய பதிவேடு உதவும். இருந்தபோதும் அதீத மனப்பதற்றம் உள்ளவர்களுக்கு இத்தகைய

(30ஆம' பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# முதலில் படியுங்கள் பின்னர் எழுதுங்கள்

*அண்மையில் ஆனந்தவிகடன் சஞ்சிகையின் 'விகடன் மேடை' கேள்வி பதில் பகுதியில் சர்வதேச எழுத்தாளரான அ. முத்துலிங்கம் சில கேள்விகளுக்கு அளித்த பதில்களின் இரண்டாம் பகுதி இங்கு நன்றியுடன் பிரசுரமாகின்றது.*

**1) பணியின் நிமித்தமாக உலகம் முழுக்கச் சுற்றிவந்தவர் நீங்கள். அந்த அனுபவத்தின் அடிப்படையில் சொல்லுங்கள். எந்த நாடு வாழச் சிறந்தது? ஏன்?**

உலகத்தில் உள்ள 196 நாடுகளில் நான் எந்த நாட்டிலும் பிறந்திருக்கலாம். இலங்கையில் நான் பிறந்தது தற்செயலானது, இதை மாற்ற முடியாது. ஆனால் 196 நாடுகளில் நான் கனடாவை தேர்ந்தெடுத்ததற்கு பல காரணங்கள் இருக்கின்றன. ஒன்றை மட்டும் சொல்கிறேன்.'பிறப்பினால் எல்லோரும் சமம்' என்பது கனடாவின் அடிப்படை கொள்கை. அப்படியானால் ஏன் படித்தவர்களும் படிக்காதவர்களும் இருக்கிறார்கள்? ஏன் ஏழைகளும் பணக்காரர்களும் இருக்கிறார்கள்? இதன் பொருள் என்னவென்றால்'வாய்ப்புகள் எல்லோருக்கும் சமம். வறிய ஆதிகுடியில் பிறந்த ஒருவர் கனடிய பிரதமர் ஆகலாம். ஐந்து வயதில் அகதியாக ஈழத்திலிருந்து கனடா வந்த ராதிகா சிற்சபைஈசன் (32) இன்று கனடிய நாடாளுமன்றத்தில் உறுப்பினர். இவரே கனடா நாடாளுமன்றம் சென்ற முதல் தமிழர் ஆவர்.

கனடாவில் மருத்துவ வசதியும் அனைவருக்கும் சமம் அத்துடன் இலவசம். மாற்றுச் சிறுநீரகத்துக்கு காத்திருக்கும் வரிசையில் தினக்கூலிக்காரர் முன்னாலும் மந்திரி பின்னாலும் நிற்பது சர்வ சாதாரணம். ஒரே பிரச்சினை அதிபயங்கரக் குளிர். இதை நான் எழுதும்போது வெளியே பனி கொட்டுகிறது. இவ்வருடம் நயாகரா உறைநிலைக்குச் சென்றுவிட்டது. முன்னெப்பொழுதும் இல்லாதமாதிரி மரங்களில் ஐஸ்கட்டிகள் குலக்கு குலக்காக தொங்கியது கண்கொள்ளாக் காட்சி.

**2) நேஷனல் ஜியாகிரபி நிறுவனத்தில் உங்கள் மூதாதையர் பற்றிய மரபுத் தொடர்ச்சியை தேடினீர்களே. அதன் சுவாரஸ்யங்களை பகிர்ந்துகொள்ளுங்களேன்.**

சில வருடங்களுக்கு முன்னர் National Geographic நடத்திய genographic projectல் பங்குபெற விரும்பி நான் என்னுடைய உமிழ்நீரை இரண்டு குப்பிகளில் அடைத்து, 99 டாலர் காசோலையுடன் அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். நான் கேட்டது தாய் வழித்தேடல். உங்கள் தாயில் ஆரம்பித்து, உங்கள் தாயின் தாய், அவரின் தாய் அப்படி ஊற்றுக்கண்ணை தேடிக்கொண்டே போய் முதல் தாயாரை கண்டுபிடிப்பார்கள். 160,000 ஆண்டுகளுக்கு முன்னர், கிழக்கு ஆப்பிரிக்காவில் வாழ்ந்த ஓர் ஆதித்தாயிலிருந்து இன்று உலகில் வாழும் அத்தனை மனிதர்களும் தோன்றினர். மற்ற தாய்களுக்கு என்ன நடந்தது? இவர்களில் இருந்து தொடங்கிய சந்ததி சங்கிலி எங்கேயோ அறுபட்டுவிட ஒரேயொரு தாய் மட்டும் எஞ்சினார். விஞ்ஞானிகள் எப்படி இந்த தாயை கண்டுபிடித்தார்கள்? நாலாம் வகுப்பில் சோதனை எழுதிய ஒரு மாணவன் 'சைபீரியா' என்று எழுதுவதற்கு பதிலாக 'கைபீரியா' என்று எழுதிவிட்டான். அவனைப் பார்த்து கொப்பியடித்த இன்னொரு மாணவனும் கைபீரியா' என்றே எழுதினான். அடுத்த மாணவனும். அதற்கு அடுத்தவனும். இப்படி எழுதியதை வைத்து ஆசிரியர் முதல் பிழையை யார் செய்தது என்பதை கண்டுபிடித்தார். அதே போல ஆதிமனித மரபணுவில் ஏற்பட்ட ஒரு பிறழ்வு வழிவழியாகத் தொடர்ந்தது. அதை வைத்து விஞ்ஞானிகள் ஆராய்ந்தபோது எல்லா வழிகளும் 160,000 வருடங்களுக்கு முந்திய ஒரு தாயில் போய்முடிந்தது.

இந்த ஆதித்தாயிலிருந்து பல குழுக்கள் பிரிந்து ஆப்பிரிக்காவின் சகல பகுதிகளுக்கும் பரவின. 60,000 வருடங்களுக்கு முன்னர் இரண்டு குழுக்கள் உண்டாகி ஒன்று வடக்கு பக்கமாக நகர்ந்து ஐரோப்பாவுக்கும், அடுத்த குழு கடல் கடந்து அரேபியாவைத் தாண்டி ஆப்கானிஸ்தான், இந்தியா, பர்மா, மலேயா, அவுஸ்திரேலியா ஆகிய தூர இடங்களுக்கும் பரவியது. என்னுடைய மூதாதையர் இந்தக் குழுவைச் சார்ந்தவர்கள்தான். ஆராய்ச்சி முடிவு எனக்கு கிடைத்த அன்று 160.000 வருடங்களுக்கு முன்னர் கிழக்கு ஆப்பிரிக்காவில் என் சந்ததியை தொடங்கி வைத்த ஆதித்தாயை மானசீகமாக நினைத்து வணங்கிக்கொண்டேன்.

**3) இணைய எழுத்தாளர்களின் செயல்பாடுகள் பற்றி உங்கள் கருத்து என்ன? அவர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

எதிர்காலத்தில் இணைய எழுத்தாளர்களிடமிருந்து நல்ல இலக்கியங்கள் பிறக்கும். ஏற்கனவே சில எழுத்தாளர்கள் தீவிரமாக எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இணையத்தில் உடனுக்குடன் எதிர்வினைகள் கிடைப்பதால் தாமதமின்றி எழுத்தை திருத்தி மேம்படுத்திக்கொள்ள முடிகிறது. பத்திரிகையில் எழுதுபவருடைய ஐந்து வருட வளர்ச்சியை இணையத்தில் ஒருவருடத்தில் அடைந்துவிடலாம். பிரச்சினை என்னவென்றால் தரமற்றவையும் இணையத்தில் உலாவுகின்றன என்ற முறைப்பாடுதான். அதனால் ஒரு பாதகமும் கிடையாது. 100 படைப்புகளில் பத்து நிச்சயம் தேறும். வலியது வாழும். நான் தொடர்ந்து இணைய தள எழுத்துக்களை படிக்கிறேன். அவற்றின் எதிர்காலம் பிரகாசமானதாகவே இருக்கிறது.

**4) வழக்கமான கேள்விதான். இருந்தாலும், எழுதத் தொடங்கும் கத்துக்குட்டிகளுக்கு நீங்கள் கொடுக்கும் டிப்ஸ் என்ன?"**

20 வயதுவரை கையில் கிடைத்ததையெல்லாம் படியுங்கள். முக்கியமாக ஆயிரக்கணக்கான தகவல்கள் தரும் இணைய தளங்களை. இருபதிலிருந்து 40 வரை தேர்ந்தெடுத்த இலக்கியங்களை, அறிவுநூல்களை படியுங்கள். 40க்கு பிறகு படிப்பதை குறைத்து சுயமாக சிந்திப்பதற்கு அவகாசம் கொடுங்கள். வாழ்நாள் முழுக்க பிறர் எழுதுவதையே படித்தால் உங்கள் சிந்திக்கும் திறன் மழுங்கிவிடும்

**5) உலக நியதிகளைக் கவனத்தில் கொண்டு சொல்லுங்கள்... தமிழகத்தில் எழுத்தாளர்களுக்கு வழங்கப்படுவது அதீத மரியாதையா... அவமான புறக்கணிப்புகளா?**

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா?

46

சலனமற்ற மனதின் ஞானம் மெய்ஞானம். 'மனிதன்' என்னும் உயிரியல் வடிவம் பல பாகங்களில் உருவாகி 'மனம்' என்னும் பிரக்ஞையை அடைகிறது. உடல், மனம், ஆன்மா என்பவை பரிமாணத்தின் படிகள். மனிதன், உடலையும் மனதையும் சரியான முறையில் வழிநடத்திச் சென்றால், ஆத்மா தானே வெளிவரும். அப்போது வாழ்வானது ஆத்மாவாகி, எந்தவிதமான துயரும் இல்லாத சக்தியாக இயங்க ஆரம்பிக்கும். உயிரையும் மனதினையும் பிரித்துக் காட்டும் எல்லை எதுவுமில்லை. தொட்டுக்காட்ட முடியாத செயற்பாடே மனமாகும்.

மனம் நன்றாக யோசித்து தீர்வுகளைத் தரும். பெரிய ஞானிகள் அவ்வாறுதான் செயற்பட்டிருக்கின்றார்கள். மனம் என்பது திடீர் செயல் அல்ல. பிரக்ஞை எல்லாவற்றையும் ஓரிடத்தில் செலுத்தியே பெற வேண்டும். சில சந்தர்ப்பங்களில் கலைகள்கூட பலவிதத்தில் மனதை செம்மைப்படுத்துகின்றன. இசை, நாட்டியத்தில் லயித்துப் போனால் மனம் அமைதி பெறுகிறது. உலகின் பல நாடுகளிலும் செய்யப்பட்ட ஆராய்ச்சிகள் மூலம் இசையின் வலிமை புரிகிறது. பல்வேறு நோய்களுக்கு இசையே எதிர்காலத்தில் உதவவுள்ளது. இசையாகக் கேட்டு ஆனந்தப்பட்டால் அந்தளவுக்கு மனதின் ஆழம் தொடப்படுகிறது. சாதாரண மக்கள் வளமான மனதுடன் வாழ்வதின் சாத்தியக் கூறுகள் விஞ்ஞான ரீதியில் புலனாகி வருகின்றன.

மனதின் செயற்பாடு செயலற்றுப் போவதற்குக் காரணம் பதற்ற நிலை. நல்ல தொடர்படிப்பு பதற்ற நிலையைப் போக்கிவிடும். நூல்களை வாசிப்பது இதற்கு மேலதிகமான செயற்பாடு. நம்முடைய சுயத்திலேயே பணிகள் அடங்கிவிட்டால் பணி செய்வது இன்பமாக இருக்கும். செயலற்ற சிந்தனை, சிந்தனையற்ற செயல் இரண்டுமே பலன் தராதவை. சிந்தனையும், செயலும் ஒன்று சேர்வது பக்குவமான நிலை. பக்குவம் இல்லாதவர்கள் வாழ்நாள் முழுவதும் யோசித்துக் கொண்டே இருப்பார்கள். சரியான வழி தெரிவதில்லை. தவறான பாதையில் சென்று துன்பத்தை அனுபவிக்கிறார்கள். அமைதியாக யோசித்து விடையை காணவேண்டும். அமைதியாக இருக்கும் விஞ்ஞானிகளின் மனம் உச்சக்கட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கும். இந்த நிலையில் பல சந்தேகங்களுக்கு தீர்வும் கிடைத்து விடுகின்றன.

வாழ்க்கையின் ஒவ்வொரு துன்பமும் மாற்றமும் மனதின் ஆழத்தில் உட்கார்ந்து விடுகின்றன. மனம் வருத்தமடைந்து கனமாகி உறைந்து போகிறது. அதன் ஞாபகமும் படைப்பும் சிதறிப்போய், உருப்படியாக எதனையும் செய்ய முடியாமல் போய்விடுகிறது. இப்படியான சிதறிப்போன மனதிலிருந்து விடுபடுவது கடினம். இதனால்தான் பலரால் வாழ்க்கையில் வெற்றி பெற முடியவில்லை. எனவே மனதினை ஒருமுகப்படுத்தி ஓய்வாக வைத்துக் கொள்ள வேண்டும். நம்பிக்கையோடு இருக்க வேண்டும். மனம் தெளிவடை-வதை படிப்படியாக உணர முடியும். வெளிச்சம் படிப்படியாக பரவுவதைப் போன்று மனமும் பிரகாசமடைவது தோன்றும்.

மனிதன் என்னும் உருவிலே அமைதி என்னும் அருவம் அடங்கியிருப்பதை உணராது, புண்ணியத்தைத் தேடி எங்கெங்கோ அலைகிறது நமது உலகம். உடல் அமைப்பில் நாம் மனிதராக இருந்தாலும் உணர்வின் அடிப்படையில் புனிதனாக எம்மை பட்டை தீட்ட ஒன்று தேவை. அதுவே 'மனம்' என்னும் செயலாகும்.

தெய்வம் நீயென்றுணர்! பாரதி

மீண்டும் தொடர்வேன்.●

## வித்துவான் செபரத்தினம் நினைவு வைபவம்

கடந்த வருடம் கனடாவில் காலமான எழுத்தாளரும் பிரபல ஆசானுமான தமிழறிஞர் வித்துவான் செபரத்தினம் அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு வைபவம் அடுத்த மாதம் (நவம்பர்) முதலாம் திகதி பிற்பகல் ரொறன்ரோவின் இஸ்லிங்டனிலுள்ள (401 & இஸ்லிங்டன்) பொஸ்கோ பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வைபவம் பற்றிய மேலதிக விபரங்களை திரு. வசந்தன் அவர்களுடன் 647 340 0329 இலக்கத்தில் தொடர்பு கொண்டு பெறலாம்.

## நிருத்த நிறைஞர் பட்டமளிப்பு விழா

திருமதி நிறைஞ்சனா சந்துரு அவர்களை அதிபராகக் கொண்ட கனடா கலைமன்றம் நடனப் பள்ளியின் பத்தாவது ஆண்டு 'நிருத்த நிறைஞர்' பட்டமளிப்பு விழா இந்த மாதம் ஐந்தாம் திகதி முற்பகல் யோர்க்வூட் நூலக அரங்கில் நடைபெறவுள்ளது.

## முதலில்..

இப்பொழுதுதான் தமிழ்நாட்டில் தமிழ் எழுத்தாளர்களை மதிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இது நல்ல காரியம். வருடா வருடம் இலக்கியத்துக்கு எத்தனையோ விருதுகளும் பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அதீத மரியாதை என்று சொல்லமுடியாது; புறக்கணிப்பும் இல்லை. புத்தகச் சந்தையில் புத்தகங்களை வாங்கிவிட்டு ஆசிரியரிடம் கையெழுத்து வாங்க நீண்ட வரிசையில் நின்றதாக அங்கே போயிருந்த நண்பன் சொன்னான். இருபது வருடங்களுக்கு முன்னர் இப்படி ஒரு காட்சியை கற்பனை செய்யமுடியுமா? வரவேற்கவேண்டிய மாற்றம்.●

## பாடசாலைப்..

மனிதனை மாடாகப் பாவித்த றிக்ஷோக்கள் இன்று முற்றாக ஒழிந்துவிட்டன. மாட்டு வண்டில்களிலும் குதிரை வண்டில்களிலும் ஏற எந்த மாணவியும் சம்மதமில்லை. சைக்கிள்களுக்குப் பதிலாக ஸ்கூட்டர்கள் வந்துவிட்டன. ஓட்டோ றிக்ஷோ - மூன்று வீலர்கள் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்துள்ளன. கரப்பொத்தான் பூச்சிகள்போல எந்த நெரிசலிலும் இலாவ-கமாகப் புகுந்து செல்லும் இவையே இன்று முக்கிய வாகனமாக விளங்குவதாக அறிக-ின்றேன். பாடசாலைப் பயணமும் காலத்துக்கு ஏற்றவாறு புது உருவம் எடுத்துள்ளது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# பாடசாலைப் பயணம்

செப்டம்பர் மாதத்தில் ஒரு நாள் காலை நேரம். நான் தொழில் புரியும் பாடசாலை வாயிலில் நிற்கிறேன். செப்டம்பர் மாதத்துக்கேயுரிய மிகவும் இதமான, ரம்மியமான சுவாத்தியம் நிலவுகிறது. காலை நேரத்துக்குரிய அவசரமும் பரபரப்பும் காணப்படுகிறது. பாடசாலை வளாகத்துக்குள் வரிசை வரிசையாக கார்கள் நிற்கின்றன. ஒவ்வொரு காரிலிருந்தும் ஒன்று, அல்லது இரண்டு பிள்ளைகளே இறங்குகிறார்கள். கைவிட்டு எண்ணக்கூடியளவு பிள்ளைகள் சைக்கிள்களில் வந்து அதற்குரிய தரிப்பிடத்தில் நிறுத்தி பூட்டிவிட்டு வகுப்புக்குச் செல்கிறார்கள். நடந்து வரும் பிள்ளைகளின் எண்ணிக்கை பெரிதாகக் காணப்படவில்லை. இந்நாட்டுக் கல்விக் கொள்கையின்படி எந்தவொரு மாணவனுக்கும் அவர் வீட்டிலிருந்து நடந்து செல்லக்கூடிய தூரத்திலேயே பாடசாலைகள் உள்ளன. தூர அடிப்படையில் அயல் பாடசாலையில் மாணவர்களுக்குக் கட்டாயம் அனுமதி வழங்க வேண்டும். அயலில் வாழ்ந்து கொண்டு இந்நாட்டுப் பிள்ளைகள் எவ்வளவு சொகுசாக ஒரு காரையும் பெற்றோரையும் மினக்கெடுத்தி பாடசாலை வருகிறார்கள் என்பதனை பார்க்கும்போது எங்கள் மாணவப் பருவ காலத்தில் எவ்வாறெல்லாம் பாடசாலைக்குச் சென்றோம் என்பதை எண்ணி ஒப்பிடாமல் இருக்க முடியவில்லை.

நான் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மாணவிகள் அங்கு கல்வி கற்றனர். மிகவும் தூரங்களிலிருந்து வரும் மாணவிகள் கல்லூரி விடுதியில் (ஹொஸ்டல்) தங்கிப் படித்தார்கள். ஏனையோர் றிக்ஷோ, குதிரை வண்டில், மாட்டு வண்டில், வான், கார், புகையிரதம், பஸ், சைக்கிள் முதலிய போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தினார்கள். அருகாமையில் வசித்த மாணவிகள் மாத்திரமன்றி, ஒருசில மைல்களுக்கு அப்பால் வாழ்ந்த மாணவிகள்கூட வெள்ளைச் சீருடையில் கூட்டம் கூட்டமாக நடந்து வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

றிக்ஷோ வண்டியை ஒரு மனிதன் இழுக்கிறான் என்பதைப் பல பெற்றோரும் கணக்கில் எடுப்பதில்லை. அவரது ஒருநாள் கூலி ஐம்பது சதமாகவோ ஒரு ரூபாவாகவோதான் இருக்கும். ஒரு றிக்ஷோவில் இரு மாணவிகள் இருப்பார்கள். அவர்களின் மடியில் வயதில் குறைந்த ஒரு மாணவி இருப்பார். மூன்று பேரின் சுமையை இழுத்துக் கொண்டு றிக்ஷோகாரர்கள் ஓடும் வேகத்திற்கு ஒருவராலும் ஈடு கொடுக்க முடியாது. சுமை நிறைந்த றிக்ஷோக்களைப் பார்த்து சென்றல் கல்லூரி மாணவர்கள். "டேய் சப்பறம் போகுதடா," என்று கூச்சல் இடுவார்கள். இதனையெல்லாம் தங்கள் பிள்ளைகள் மரியாதையாகப் பாடசாலைக்குப் போக வேண்டுமென்ற கொள்கையுடைய பெற்றோர் காதில் வாங்கிக் கொள்வதில்லை.

குதிரை வண்டிலொன்று கொட்டடியிலிருந்து அரை டசின் மாணவிகளை ஏற்றிக் கொண்டு வரும். ஏதோ ராசகுமாரிகள்போல பாடப் புத்தகங்களோடும் வயலின் முதலிய வாத்தியக் கருவிகளோடும் வந்து இறங்குவார்கள். ஒருசில மாட்டு வண்டிகளும் வருவதுண்டு. இவற்றுக்குள்ளே மெத்தை போட்டு பார்ப்பதற்கு உல்லாசமாக இருக்கும். தமிழ்ப் படங்களின் கிராமப்புறக் காட்சிகளில் கதாநாயகி ஒருக்களித்து ஒய்யாரமாக வருவதுபோல்தான் இவர்கள் இருப்பார்கள். பொதுவாக இந்த வில்லு வண்டியில் வருபவர்கள் வசதி படைத்த குடும்பத்தைச் சார்ந்தவர்களாகவே இருப்பார்கள். சொந்த வண்டில் என்பதால் பாடசாலை விட்டவுடன் இந்தச் சின்ன எஜமானிகள் ஆடி அசைந்து போய் வண்டியில் ஏறுவார்கள்.

வான் என்று சொன்னவுடன் நினைவுக்கு வருவது முத்துச்சாமியின் வான்தான். ஆஜானுபாகுவான தோற்றம், பெரிய தும்புக்கட்டை மீசை. இவரது வானில் வரும் பிள்ளைகளுக்கு இவர் என்றால் கிடு நடுக்கம். ஒருசில நிமிடங்கள் பிந்திப் போனாலும் விட்டுப் போட்டு போய்விடுவார். அதுமட்டுமன்றி வீட்டிலும் முறைப்பாடு செய்து விடுவார். ஆனபடியால் மணி அடித்தவுடன் இவரின் வான் நிரம்பிவிடும்.

கார்கள் என்றால் வாடகைக் கார்களின் தொகையே அதிகம். இங்குள்ளவர்களின் மொழியில் கூறுவதானால், 'A tin of Sardines' என்றுதான் கூற வேண்டும். கிழங்கு அடுக்கியதுபோல் எவ்வளவு பேரை ஏற்ற முடியுமோ அவ்வளவு பேரை ஏற்றுவார்கள். முன்சீற்றில் மாத்திரம் மூன்று பேருக்குக் குறையாமல் இருப்பார்கள். சீற் பெல்ற் என்ற சொல்லே இவர்களின் அகராதியில் கிடையாது. பின்சீற்றில் இருப்பவர்களின் சீருடை கசங்கிப்போய் அவர்களைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கும். இதற்கு மாறாக, சொந்தக் கார்களில் வரும் மாணவிகள் அலுங்காமல் நலுங்காமல், சீருடையின் மடிப்புகள் (Pleats) குலையாமல் காரைவிட்டு இறங்குவதைப் பார்க்கும்போது நம்மை அறியாமலே எரிச்சலும் பொறாமையும் ஏற்படும்.

சாவகச்சேரி, கோண்டாவில் முதலிய இடங்களிலிருந்து புகையிரதம் மூலம் வந்து படித்த பிள்ளைகள் அனேகர் இருந்தார்கள். சில சரக்கு ரயில் வண்டிகள் பாடசாலை தொடங்கும் நேரத்துக்கும், முடியும் நேரத்துக்கும் பொருந்தக் கூடியதாக ஓடின. யாழ்ப்பாணம் ஸ்ரேஷனில் இறங்கி பருத்தித்துறை வீதியால் வந்து முதலாம் குறுக்குத் தெருவரை இவர்கள் கூட்டம் கூட்டமாக ஓட்டமும் நடையுமாகவே வருவார்கள். ஆனாலும் நேரத்துக்கு வந்து விடுவார்கள்.

பஸ் போக்குவரத்து பெரிதாக அக்காலத்தில் இருக்கவில்லை. தீவுப் பகுதிகளில் இருந்து வரும் மாணவிகள் பெரியகடை பஸ் தரிப்பு நிலையத்தில் வந்திறங்கி ஆஸ்ப்பத்திரி வீதியால் வந்து அதிபர் மிஸ் தம்பையாவின் (Principal's bungalow) வீட்டு வளவுக்கூடாக பாடசாலை மைதானத்தை அடைந்து பாடசாலைக்குள் பிரவேசிப்பார்கள். பஸ் போக்குவரத்து அவ்வளவு தூரம் நம்பகரமானதாக அக்காலத்தில் இருக்கவில்லை. அதனால் பெரும்பாலும் இம்மாணவிகள் நேரத்தோடு பாடசாலைக்கு வருவது பகீரதப் பிரயத்தனமாக இருந்தது.

நான் படித்த காலம் பெண்கள் சைக்கிள் ஓடத் தொடங்காத காலம். ஒருசில மாணவிகளே சைக்கிளில் வருவார்கள். அவர்களெல்லாம் எம்மைப் பொறுத்தமட்டில் பெரிய ஒலிம்பிக் வீராங்கனைகள். சில பிள்ளைகளை தகப்பனாரோ அல்லது சகோதரனோ சைக்கிள் பாரில் அல்லது கரியரில் ஏற்றி வருவதுமுண்டு. நான் ஆசிரியையாகப் பணியாற்றிய காலத்தில் ரியூசன் கலாசாரம் (Tuition Culuture) வந்து விட்டது. அத்துடன் மாணவிகளின் சைக்கிள் சவாரிகளும் ஆரம்பித்துவிட்டது. அதனால் பாடசாலைகளின் சைக்கிள் தரிப்பிடங்கள் நிறுவப்பட்டன.

( 8ஆம் பக்கம் வருக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*



# கல்லைக் கண்டால்...

கடந்த இதழில் தவறவிடப்பட்ட பல கற்கள் உள்ளுணர்வில் உறுத்துவதாக பலர் கூறினார்கள். சரி. உங்களுக்கு தெரிந்தவற்றைக் கூறுங்கள். பொறுக்கிக் கொள்கின்றேன் என்றேன். சட்டென்று ஞாபகம் வரவில்லை என்ற பலரும், ராசிக் கற்கள் என்றே முடித்தார்கள். வைரம் வைடூரியம் மரகதம் பவழம் மாணிக்கம் கோமேதகம் புஷ்பராகம் ரத்தினம் முத்து என்ற நவரத்தினங்களைப் பெயரளவில்கூட ஞாபகம் வைத்திருக்க முடியாமற் போனது அவர்களின் ராசி!

பிள்ளையார் பால் குடித்ததும் முகமதியர் சுத்திகரிப்பதும் கல்லில் தானே என்பதே எனக்கு வந்த முதலாவது 'கோல்'!

பின்பு விகடன் வாசகர் ஒருவர் பூமியை தாக்க வரும் விண்கல் பற்றிக் குறிப்பிட்டதை அப்படியே தருகின்றேன்.

1950bV' என்று பெயரிடப்பட்ட விண்கல் 44,800 தொன் எடையும் ஒரு கி.மீ. அகலத்தோடும் இருக்கின்றதாம். இது விநாடிக்கு ஒன்பது மைல் வேகத்தில் பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கின்றது. 2880ம் ஆண்டில் இது மணிக்கு 38 ஆயிரம் மைல் வேகத்தில் பூமியில் மோதலாம் என்று பயமுறுத்துகின்றார்கள் விஞ்ஞானிகள். அப்படி மோதினால் பூமி அதி பயங்கர சத்தத்துடன் வெடித்து தட்ப வெப்ப நிலை மாறி சுனாமி நிலநடுக்கம் என அடுக்கடுக்கான பாதிப்புகள் ஏற்படும் என்கின்றார்கள். இன்னொரு தரப்பு விஞ்ஞானிகளோ அது பூமியை நோக்கி வருவது உண்மைதான். ஆனால் அது பூமியில் மோத 300ல் ஒரு பங்குதான் வாய்ப்பு இருக்கிறது என்கிறார்கள். இது எப்பொழுது பிரசுரமானது என்றேன். செப்டம்பர் மாதம் 3ம் திகதி வெளிவந்த ஆனந்த விகடனில் என்றார்.

கைலாயத்திலிருந்து கொண்டு வரப்படும் ஒவ்வொரு கல்லிலும் இறைவன் இருக்கின்றார் என்றார் றிச்மண்ட் ஹில் ஆலயத்தில் ஒருவர். திருப்பதி வெங்கடாஜலபதி கோவிலும் மயிலை காபலீஸ்வரர் கோவிலும் கைலாசத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட கற்களால் கட்டப்பட்டதாக மேலும் அவரே தனக்குத் தெரிந்த தகவலைத் தந்தார். சிதம்பரத்தில் ரத்தினசபாபதியாக சிவபெருமான் பச்சை வர்ண மரகத கற்களில் ஜொலிக்கின்றார். அத்துடன் சனிபகவானை வழிபடும் இடத்திலும் மரகத கற்கள்தான். திருநள்ளாற்றில் மரகத லிங்கமாகவே காட்சி தருகின்றார் என அடிக்கடி இந்தியா சென்று வருபவர் அருகிலிருந்து தொடர்ந்தார். பிற வார்த்தை பேசற்க ஆலயத்துள் என்றபடி எம்முடன் இணைந்த இன்னுமொருவர் உலக அழகி கிளியோபட்ராவிடம் எமரால்ட் எனப்படும் பச்சை வர்ண விலையுயர்ந்த கற்கள் இருந்ததாக வரலாற்றை நினைவு கூர்ந்தார்.

'வூட்சைட்' வாசிகசாலைக்குள் கண்ட ஓய்வு நிலை அதிபர் ஒருவர் தமிழர் தகவல் கட்டுரைகள் பிரமாதம் என்றார். அதிலும் செப்டம்பர் மாத இதழில் வெளிவந்த கட்டுரை ஏராளமான தகவல்களை அழகு தமிழில் தந்தது அற்புதம் எனப் பாராட்டினார். தான் ஆவுரஞ்சிக் கல் பற்றியும் எதாவது குறிப்பு இருக்குமோ என தேடியதாகவும் இல்லாத பொழுது மகிழ்ந்ததாகவும் தெரிவித்ததுடன் ஆவுரஞ்சிக் கற்கள் உண்மையில் கற்கள் அல்ல, மரக்குற்றிகள். பழங்காலத்தில் கால்நடைகள் அதில் தேய்த்து தம்மை ஆசுவாசப்படுத்திக் கொள்ளும் வகையில் நீர் நிலைகள் அருகேயும் பாதை ஓரங்களிலும் மனிதரால் நாட்டப்பட்டவை. சில இடங்களில் அவை கற்றூண்களாக இருந்த போதும் கால்நடைகளை காயப்படுத்தும் என்ற காருண்யத்தால் பரவலாக மரக்குற்றிகளையே நட்டனர் என்றார்.

எமக்கு முன்பாக smartphone னை நோண்டிக்கொண்டிருந்த உயர்தர மாணவன் தனது தகவலை phone னில் காட்டியதில் தெரிந்தது :The ten degrees of hardness of stones in the form of minerals as follows, 1.Talc 2.Gypsum 3.Calcite 4.Fluorite 5. Apatite 6.Orthoclase 7.Quartz 8.Topaz 9.Corundum 10.Diamond. Each stone can be scratched by tha harder ones below it.

கற்காலத்தை இங்கிலாந்தில் நினைவூட்டும் பெருந்தூண்கள் stone henge! பிரபல ஆங்கில பாடகர் குழு the rolling stones! அதிகம் முத்தமிடப்பட்ட கல் blarney stone! இஸ்லாம் வழிபடும் கல் kaaba! என தன்பங்குக்கு தகவல் தந்தான் என் மகன்.

ஒரு கல்லால் ஒரு மனிதன் விழலாம். ஆனால் ஒரு கண்டமே விழுந்த கதை தெரியுமா? ஆபிரிக்காவின் ஓரஞ்சு நதியோரம் விளையாடிக் கொண்டிருந்த ஸ்டிபனாஸ் என்ற சிறுவன் கையில் வித்தியாசமான வெள்ளைக் கல் கிடைத்தது. அதை அவன் அயல் வீட்டிலிருந்த உல்லாச பயணியிடம் கொடுக்க அதை அவர் இங்கிலாந்தில் ஒரு வைர வியாபாரிக்கு விற்க தகவல் கசிந்து ஆபிரிக்காவே ஒரு வைர சுரங்கம்தான் என ஐரோப்பியர்கள் கண்டுபிடித்தார்கள்.

மனிதர் உணர்ந்து கொள்ள இது சில்லறைக் காதல் அல்ல...அதையும் தாண்டி பெறுமதி வாய்ந்தது என்று கத்த ஆசையா? உங்கள் காதலி கவிதை எழுதுபவரா? மிஸ்ட்ரி மாஸ்டர் பேனா வாங்கி கொடுங்கள். அதில் 840 அசல் வைர கற்கள் உண்டு. மது அருந்துவாரா? அதற்கும் தகதகக்கும் வைரங்கள் பதித்த கிண்ணங்கள் பல லட்சங்களின் விளிம்பில் வாங்கலாம். உங்கள் காதலி விளையாட்டுப் பிள்ளையா? கறுப்பு வெள்ளை நிறங்களில் 9900 வைரங்கள் பதித்த சதுரங்கப் பலகை வாங்கி கொடுங்கள். காதலி உங்களுக்கே 'செக்' வைக்கலாம். பேச்சு தீவிரவாதியா? 120 கரட் வைரம் பதிக்கப்பட்ட அலைபேசி உள்ளது. மடிகணினியை இயக்கும் ஆழி வைரக்கல் என பல கோடிகள் வைரத்தை காதலிக்கின்றன.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னையா விவேகானந்தன்



# அகதித் தொழிலாளி நான்

19

பெரும்பாலான கவிதைப் பதிவுகள் ஐரோப்பிய நாடுகளின் வாழ்களச் சூழலையே களமாகக் கொண்டுள்ளன. 80களில் தமிழர் அகதிகளாக அதிகளவிற் சென்ற நாடுகள் ஐரோப்பியக் கண்டத்திலேயே இருந்தன. இவர்களில் குறிப்பிடத்தகவானோர் பின்னாளில் வடஅமெரிக்கப் பகுதிகளுக்கும் இடம் பெயர்ந்தனர்.

தொடக்க காலத்தில் எதிர்கொண்ட இன்னல்களுள் தொழில் பற்றிய அனுபவங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. குடியேறிய அனைவருக்குமே பொதுவான சிக்கலாக இருந்தது பொருளாதாரப் பிரச்சனையே.

கடன்பட்டு வந்தோரும், குடும்பப் பாரங்களைச் சுமந்து வந்தோருமாக பலருக்கும் பணம் அவசியமாகவிருந்தது. எமது பிள்ளைகள் சொர்க்கபுரிக்குச் சென்றுவிட்டனர் என்று நிறைவு கொண்ட பெற்றோரை மகிழ்ச்சிப்படுத்த வேண்டியிருந்தது.

தொழில் தேடுவதிலும், தொழில் செய்வதிலும் கல்வியறிவு ஏற்றத்தாழ்வுகள் பெரிதும் உதவியதாகத் தெரியவில்லை. பெரும்பாலானோர் கிடைத்த வேலைகளில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டனர். இவர்களில் சில படைப்பாளிகள் தம் தொழில்சார் உணர்வுகளை ஆழமான பதிவுகளாக்கியுள்ளனர்.

பகலில் வேலை
தேடிய கால்கள்
பழிக்குப் பழி' என
வலித்தன...
வெறித்த சுவர்கள்
அதே முகமென
அலுப்புடன் முறைத்தன...
எனது நம்பிக்கை
நப்பாசையில்
முயற்சி' என முனகியது...
கடிதங்கள் 'என்னைப் பிரி'
என ஒதுங்கிக் கிடந்தன...
அதே கட்டில் 'வந்து விட்டாயா' என
ஏளனம் செய்தது.
மேலும் இல்லாத கண்ணீர்த்துளி
ஆழ்ந்த அனுதாபம்' எனக்
கீழ் விழுந்தது
ஆம்...
மீண்டும் நான் உறங்கப் பார்க்கின்றேன்"
*(சங்கமம் 14, 1991 பக்கம் 24)*

திசோ என்ற கவிஞர் எழுதிய கவிதை இது. நாள்தோறும் வேலை தேடி தோற்றுப்போகின்ற ஒருவனின் நாளாந்தம்'இக்கவிதை. நாள்தோறும் தோற்று வரும் இவனை முகடும் கட்டிலும் கூட ஏளனம் செய்கின்றன. இன்ப துன்பங்களில் பங்கேற்கும் கண்ணீர் கூட அனுதாபத்தை மட்டுமே தெரிவிக்கின்றது.

நேற்றையைப் போலவே இன்றைய நாளிலும் உறங்கப் பார்க்கின்றான். இயலாது என்பதை அறிந்திருந்தும்.

யதார்த்தங்களை மறந்து போனதில்
அல்லது
நினைக்க மறுத்ததில்
இருப்புகள் தலைகீழாக,
எத்தனங்கள் ஒவ்வொன்றும்
என்
சூழலிடத்தையே மாற்றியது.

தகுதி வேலை ஊதியம்
சமன்பாடு குழம்பிய நிலையில்
இன்னுமொரு முதலாளித்துவம் தெருவில் நான்.

ஒரு பிராங் எனினும்
என் ஊதியம் பெருக்க
முதலாளி குண்டியைக் கூட
துடைக்கத் தயார்.

என்னைப் பார்த்து
இன்னுமொரு துடைப்பான்
சிரிப்பதாயின் சிரி.

இப்போது
யதார்த்தத்தைப் புரிந்த
ஓர்
அகதித் தொழிலாளி நான்." *(புலம் பெயர்ந்தோர் கவிதைகள் பக் 132)*

'இனி எழுந்து' என்ற தலைப்பில் தேவி கணேசன் எழுதிய கவிதை இது. பணத்துக்காக எத்தகைய வேலையோடும் உடன்படத் தயாராகவிருந்தோரின் மனநிலையைப் புலப்படுத்துகின்றது இக்கவிதை.

தகுதிக்கான வேலை, வேலைக்கான ஊதியம் என்ற ஒழுங்குமுறைகள் குழம்பிய சூழ்நிலையில் யதார்த்தத்தோடு ஒத்துப்போவதைத் தவிர பலருக்கும் வேறு வழியிருக்கவில்லை.

அகதி என்ற காரணப் பெயரும், கறுப்புத் தோலும், அந்நிய உணர்வும், மொழி தெரியாமையும் நல்லதொரு வேலையைப் பெற்றுக் கொள்வதற்குத் தடங்கலாகவே இருந்தன. அவ்வாறு வேலைகளைப் பெற்றுக்கொண்டாலும் அவற்றைத் தக்க வைக்க பெரும் போராட்டம் நிகழ்த்த வேண்டியிருந்தது.

இக்காலத்தே வலுவான கட்டமைப்போடு எழுந்து நிற்கின்ற புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் வேர்களில் எம் முன்னோடிகள் சொரிந்த இரத்தத்தின் அளவு மிகப் பெரிது.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## ஓடியோடி எடுத்த படங்கள் ஓகோ, இதற்குத்தானா?

இந்த மாதம் நடைபெறவுள்ள நகர சபைகளுக்கான தேர்தல் ரொறன்ரோ பெரும்பாகத்தில் வசிக்கும் தமிழர்களை அமர்க்களப்படுத்தி வருவது மட்டுமன்றி, அவர்களின் தலையையும் சுற்ற வைக்கின்றது.

அபேட்சகர்களாக நிற்பவர்கள் சிலர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அமைச்சர்கள், மற்றும் எம்.பிமாருடன் நின்று 'போஸ்' கொடுத்து எடுத்த படங்கள் வண்ணப் பிரசுரங்களாகவும், பத்திரிகை விளம்பரங்களாகவும் இப்போது வந்து கொண்டிருக்கின்றன.

நகரசபைகள் மற்றும் கல்விச் சபைகளின் உறுப்பினர்களாகப் போட்டியிடுவதற்கு இந்தப் படங்கள்தான் இவர்களின் தனித் தகுதியென்றால்...... கனடியத் தமிழரை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்!

*குறிப்பு: சிலர் எப்போதும் கமராவும் கையுமாக அலைவதும், 'புள்ளி'களைக் கண்டதும் பாய்ந்து சென்று ஒட்டியவாறு நின்று 'கிளிக்' பண்ணிப் படம் காட்டுவதும் ஏனென்று இப்போதுதானே புரிகின்றது.*

## ரோறியிடம் டக் போஃர்ட்: என் கேள்விக்கென்ன பதில்?

ரொறன்ரோ மேயர் தேர்தலில் இறுதியாகக் களத்தில் குதித்தவர் றொப் போஃர்ட்டின் சகோதரரான நகரசபையின் 2ம் வட்டார உறுப்பினர் டக் போஃர்ட்.

மற்றைய மேயர் வேட்பாளர்களான ஒலிவியா சோ, ஜோன் ரோறி சகிதம் இவர் பங்கேற்ற முதலாவது விவாதம் கடந்த மாதம் 23ம் திகதி நடைபெற்றது. இதன்போது றொப் போஃர்ட் இரண்டு கேள்விகளை ஜோன் ரோறியிடம் கேட்டு அவரை மடக்கிய விடயத்துக்கு ஊடகங்கள் முதலிடம் கொடுத்துள்ளன.

கேள்விகள்: நகரசபையில் எத்தனை நிலையியற் குழுக்கள் உள்ளன? கொள்வனவு விடயங்களை எந்தக் குழு கையாளுகின்றது?

நிலையியற் குழுக்களின் எண்ணிக்கை ஏழு. இதனை ஐந்து என்று தவறாக ரோறி கூறியிருந்தார். இரண்டாவது கேள்விக்கு ரோறி பதிலளிக்காது மழுப்பினார்.

*பார்வையாளர்களாக இங்கிருந்தவர்கள் பலரும் டக்கின் ஆதரவாளர்களானதால், கரகோஷ வரவேற்பு கூரையை தொட்டது.*

## யாழ்தேவிக்கும் பொன்னாடை!

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரான மாவை சேனாதிராஜாவுக்குச் செல்லும் இடமெங்கும் பொன்னாடை போர்த்து மகிழ்வூட்டுகிறார்கள். "இது பொன்னாடை அல்ல; போராடை" என்று அவரும் சனங்களை மகிழ்வூட்டி வருகிறார்.

25 வருடங்களின் பின்னர் அங்கு போன யாழ்தேவி ரயிலுக்கும் பொன்னாடை மரியாதை என்றால்.... யாழ்தேவியும் போருக்குத்தான் போகிறதோ!

## ஜப்பானில் 'சென்டனேரியன்கள்' 58,820 என்றால் நம்புவீர்களா!

நூறு வயதைத் தாண்டியவர்களை 'சென்டனேரியன்' என்று அழைப்பர். உலக அளவில் அதிக சென்டனேரியன்களைக் கொண்ட நாடாக ஜப்பான் திகழ்கிறது.

இங்கு நூறு வயதைக் கடந்தவர்கள் 58,820 பேர் வாழ்ந்து வருகின்றனர். அதாவது ஒரு லட்சம் பேருக்கு 46.21 பேர் என்ற எண்ணிக்கை இது.

கின்னஸ் சாதனைப் புத்தகத்தின் பிரகாரம் 116 வயதில் இங்கு வாழும் பெண்ணாக மிசோவா ஒகாவா என்பவரும், 111 வயதில் வாழும் ஆணாக சகாரி சோமாய் என்பவரும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

## தமிழகத்தில் மட்டும் 30,000 போலி டாக்டர்கள்

தமிழகத்தில் தற்போது முப்பதாயிரம் வரையான போலி டாக்டர்கள் இருப்பதாக இந்திய மருத்துவர் கவுன்சில் அபாய அறிவிப்புக் கொடுத்துள்ளது. இங்குள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் சராசரியாக ஆயிரத்துக்கும் அதிகமான போலி டாக்டர்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இவர்களின் கட்டணம் குறைவு: ஆனால் சிகிச்சை ஆபத்தானது. ஆளையே 'குளோஸ்' பண்ணும் சிகிச்சையில் இவர்கள் வல்லவர்கள்" என்று சங்க மாநிலத் தலைவர் பாலசுப்பிரமணியன் எச்சரித்துள்ளார்.

இந்தப் போலிகளில் பலர் 'பணக்கார நோயாளி'களின் மருத்துக் காப்புறுதியைச் சுளையாக விழுங்கி விடுவதாகவும் மருத்துவர் சங்கம் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளது.

*தமிழகத்தில் குறைந்த செலவில் தங்கியிருந்து சிகிச்சை பெறலாமென்று அங்கு படையெடுக்கும் கனடா உட்பட்ட வெளிநாட்டு நோயாளிகளுக்கு இந்தத் தகவல் சமர்ப்பணம்.*

## கள்ளுப் போட்டிக்குப் பரிசு பத்துக் கோடி ரூபா

இந்தியாவின் பல மாநிலங்களில் படிப்படியாக மதுவிலக்கு சட்டமாக்கப்பட்டுள்ளது. இதற்குப் பலமான வரவேற்புக் கிடைத்துள்ளது.

இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கொன்றில் சில சட்டவாதிகள், கள்ளுக்கு ஏன் தடை விதிக்கவில்லை என்று எழுப்பிய வாதம், தமிழ்நாடு கள் இயக்கத்தினரை உசுப்பி விட்டுள்ளது.

கள் ஒரு போதைப்பொருள் அல்ல என்று தெரிவிக்கும் இவர்கள், இது போதைப்பொருள் என்று சட்டவாளர் எவராவது நிரூபித்தால் 10 கோடி ரூபா சன்மானம் என்றும் அறிவித்துள்ளது.

*எந்தப் பெருங்குடி மகன் இந்தச் சவாலை ஏற்றுக்கொள்வாரோ தெரியாது!*

## பகலில் உயர்ந்த நாற்காலி; இரவில் சாரதி ஆசனம்!

நோர்வேயின் பிரதமர் ஜென்ஸ் ஸ்டோல்டென்பார்க், நாட்டில் என்ன நடைபெறுகிறது என்பதை நேரடியாகக் கள ஆய்வு செய்ய விரும்பினார்.

பிரபல விளம்பர நிறுவனமொன்று அவருக்கு உதவ முன்வந்தது. சாதாரண பிரஜைபோல உடையணிந்து அடிக்கடி இரவு வேளையில் டாக்சி சாரதியாக மாறியது வாய்ப்பாகப் போய்விட்டது.

தமது அனுபவத்தை பேஃஸ் புத்தகத்தில் அவர் பதிவேற்றம் செய்வதை, அடுத்த தேர்தலுக்கான பிரசாரம் என்று எதிர்க்கட்சிகள் தாக்குகின்றன.

*தேர்தலில் தோல்வியடைந்தால் இவர் முழுநேர டாக்சி சாரதியாகலாமென சில செய்தியாளர்கள் ஆருடம் சொல்கின்றனர்.*

**உதாசனன் உலா விருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ராஜ்மோகன்

## பணிலமாடம்

7

# பேபி பூமேர்ஸ்
# Baby Boomers

அண்மையில் பங்குச் சந்தையில் அனுபவம் உள்ள ஒருவருடன் பேசிக்கொண்டிருந்த போது, அவரிடம் இருந்து எழுந்த பேபி பூமேர்ஸ் - Baby Boomers என்றால் என்ன? என்ற கேள்வியை நான் எதிர்பார்க்கவில்லை. இதுவே இன்று உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் பெற்றிருக்கும் பேபி பூமேர்ஸ் பற்றிய தகவல்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள வைத்தது.

பேபி பூமேர்ஸ் என்ற சொல்லை பல இடங்களில் நீங்கள் கேட்டிருப்பீர்கள். யார் இந்த பேபி பூமேர்ஸ்? இவர்கள் எதற்காக இன்று முக்கியத்துவம் பெறுகின்றார்கள்? என்பதையெல்லாம் அறிவதற்கு முன்னர் இரண்டாம் உலகப் போர் பற்றிய அடிப்படைத் தகவல்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

1939ஆம் ஆண்டு ஆரம்பித்து 1945ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த இரண்டாம் உலகப் போரில் பாரிய இழப்புகளைப் பல நாடுகள் சந்தித்துக் கொண்டதை நீங்கள் அறிவீர்கள். இந்தப் போரில் 100 மில்லியன்களுக்கும் மேலான போர்த்துறை வீரர்கள் பங்குபற்றியிருந்தனர். ஜேர்மனி, அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, ஜப்பான், ரஷ்யா, போலந்து, இத்தாலி, சீனா, பிரான்ஸ், கனடா போன்ற பல நாடுகள் தமது முழுப் பலத்தையும் பயன்படுத்திப் போரில் ஈடுபட்டன. போர்த்துறை வீரர்கள் அனைவரும் தமது நாடுகளின் வெற்றியைத் தீர்மானித்துக் கொள்வதற்காக தமது சமூக வாழ்வை விட்டு விலகி நேச நாடுகளின் எல்லைக-ளில் எதிரிகளுடன் போரிட்டு வந்தார்கள்.

போர் ஏற்படுத்திய தாக்கங்களினாலும், மன அழுத்தங்களினாலும், பொருளாதாரப் பிரச்சனைகளினாலும் வழமையாக சமூக மட்டத்தில் நடைபெற்று வந்த திருமணங்களும், குழந்தைப் பேறுகளும் பிற்போடப்பட்டு சமுதாயம் சிதறுண்டு போய்க் கிடந்தது. இந்த நிலை அநேகமாக உலகில் உள்ள எல்லா நாடுகளுக்கும் ஏற்பட்டிருந்தது.

1945ஆம் ஆண்டு ஜேர்மனியின் சரணடைவுக்குப் பின்னரும், அமெரிக்கா ஜப்பான் மீது போட்ட அணு குண்டுகளின் பேரழிவின் பின்னரும் இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது. உலகப் போரின் பாதிப்பில் இருந்து மீண்டுவந்த பெருமளவிலான போர்த்துறை வீரர்களும், மக்களும் தமது சமூகத்துடன் தம்மை இணைத்துக் கொண்டு சாதாரண வாழ்க்கைச் சக்கரத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள ஆரம்பித்தார்கள்.

ஒவ்வொரு நாடும் தமது மீள்கட்டுமானப் பணிகளில் அக்கறை எடுத்துக் கொண்ட இந்தக் காலத்தில் அங்கு பல திருமணங்களும் நிச்சயிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. குண்டு வெடிப்புகள் கேட்ட இடங்களில் திருமணச் சடங்குகளும், குழந்தைகளின் குவா குவா சத்தங்களும் அதிகமாகக் கேட்கத் தொடங்கியது. இதுதான் பேபி பூமேர்ஸ்களின் ஆரம்ப காலம்.

சமுதாயத்தில் ஏற்பட்ட இந்த மாற்றமும், அரசாங்கங்கள் ஏற்படுத்திக் கொடுத்த வசதி வாய்ப்புக்களும் ஓர் இறுக்கமான சமூகத்தைத் தோற்றுவித்து 1946ஆம் ஆண்டுக்கும் 1965ஆம் ஆண்டுக்கும் இடையே உலகில் அதிகளவிலான குழந்தைகள் பிறப்பதற்குக் காரணமாக இருந்தன. கனடாவில் குழந்தை பிறக்கும் விகிதம் 1945ஆம் ஆண்டை விட 1946 ஆம் ஆண்டு பதினைந்து சதவிதத்திற்கும் மேலான அதிகரிப்பாகக் காணப்பட்டது. கனடா புள்ளிவிபரத் திணைக்களத்தின் தகவலின்படி, இக்காலத்தில் சராசரியாக ஒவ்வொரு வருடமும் 412,000 குழந்தைகள் பிறந்ததாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. வருடா வருடம் இந்த அதிகரிப்பு கூடிக்கொண்டு வந்து சராசரியாக ஒரு பெண்ணுக்கு 3.7 என்ற அளவில் குழந்தைகள் இருந்ததாகத் தெரிவிக்கின்றது. 2011ஆம் ஆண்டு census கணிப்பின்படி இதன் எண்ணிக்கை ஒரு பெண்ணுக்கு 1.7 மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் திடீர் அதிகரிப்பினால் இக்காலத்தில் பிறந்த குழந்தைகளுக்கு பொருளியல் வல்லுநர்களால் பேபி பூமேர்ஸ் என்று பெயரிடப்பட்டது. இவர்கள் உலகப் பொருளாதாரத்தில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாமல், தற்போது ஓய்வு பெறவும் ஆரம்பித்திருக்கின்றார்கள். இதுதான் இந்த பேபி பூமேர்ஸ்களின் சரித்திரம்.

நாடுகளின் பொருளாதாரம் வீழ்ச்சியடையாமல் காப்பாற்றி, நமக்கெல்லாம் மேலும் வேலைவாய்ப்புக்களை இன்னும் 20 வருடங்களுக்குத் தொடர்ந்து தரவிருக்கும் எமது மூத்த சமுதாயத்தினர் தான் எமக்கான இன்றைய முதலீடு. இவர்களுக்கு நாம் இனிமேல் வழங்கவிருக்கும் சேவைகளே எமக்குரிய வரவு, செலவுகளாக இருக்கும்.

ஒவ்வொரு அரசாங்கங்களும் அடுத்த 20 வருடங்களுக்கு அதிகரிக்கவிருக்கும் முதியோர்களுக்கான பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றன. முதியோர் இல்லங்கள், வைத்தியசாலைகள், விளையாட்டுத் திடல்கள் என்று பல விடயங்களில் அக்கறை காட்டப்படுகின்றது. இது ஒரு 20 வருடத்திற்கான தற்காலிகமான தீர்வாகக் கருதப்படுகின்ற போதும் இக்காலப் பகுதிகளில் நாம் செலுத்த இருக்கும் வரிகளின் அளவு பெருமளவில் அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது முதியவர்களுக்காக அபிவிருத்தி செய்யப்படும் இத்திட்டங்களின் எதிர்காலம் 20 வருடங்களுக்குப் பின்னர் என்னவாகும் என்பதும் ஒரு கேள்விக்குறியாக இருக்கின்றது. 1966 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் வீழ்ச்சி கண்டுள்ள குழந்தை பிறக்கும் விகிதம் வேலையில்லாப் பிரச்சனை மற்றும் பொருளாதாரப் பின்னடைவுகளை ஏற்படுத்துமெனவும் எதிர்வு கூறப்படுகின்றது.

ஆளுக்கு இரு குழந்தையாக இருந்து ஆளுக்கு ஒரு குழந்தையாக மாறி பின்னர் குடும்பத்துக்கு ஒரு குழந்தையாகி இறுதியாக நாய் ஒன்றை வளர்த்தால் போதும் என்று மாறிவரும் கலாசாரத்தினால், எதிர்காலத்தில் எங்கள் சந்ததியினருக்கு பேபி லூசேர்ஸ் - Baby Losers என்று பெயர் வைக்கவும் கூடும்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# ஓம் என்ற நாதமும் நாசா விஞ்ஞானமும்!

உலகில் எத்தனையோ விஞ்ஞான ஆய்வுகளைச் செய்து வென்றுவிட்ட நாசா நிறுவனம் சில ஆய்வுகளால் களைத்தும் போயிருக்கின்றது! அப்படி அவர்களை அலைய வைத்த மிகப்பெரிய ஆய்வு இந்து தர்மத்தின் ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் ஓசையாகும்!

உலகம் உருண்டையானது என்று விஞ்ஞானம் கண்டு சொல்லும் முன்பே மாணிக்க வாசகர் தனது திருவாசகத்தில் திருவண்டப் பகுதியில் பிரபஞ்சத்தைப் பற்றி மிகவும் விரிவாகப் பேசுவார்!

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்,
அளப்புஅரும் தன்மை, வளப் பெரும் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்ற எழில் பகரின்
நூற்று ஒரு கோடியின் மேற்பட விரிந்தன
இல் நுழை கதிரின் துன் அணுப் புரைய,
சிறிய ஆகப் பெரியோன். தெரியின்
வேதியன் தொகையொடு மால் அவன் மிகுதியும்,
தோற்றமும், சிறப்பும், ஈற்றொடு புணரிய
மாப் பேர் ஊழியும், நீக்கமும், நிலையும்,
சூக்கமொடு, தூலத்து, சூறை மாருதத்து
எறியது வளியின்
கொட்கப் பெயர்க்கும் குழகன்: முழுவதும்
படைப்போன் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போன் காக்கும் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவுள் திருத்தகும்
அறுவகைச் சமயத்து அறுவகையோர்க்கும்
வீடு பேறு ஆய், நின்ற விண்ணோர் பகுதி

இதிலே மணிவாசகர் உலகம் உருண்டையானது. அது ஒன்று மட்டுமல்ல. நூற்றியொரு கோடிக்கு மேற்பட்ட கோள்களும் கிரகங்களும் பிரபஞ்சத்திலே சிதறிக் கிடக்கின்றன. அவை சூரியசக்தியில் இருந்து தோன்றும் அணுக்கதிர்களின் ஈர்ப்புச் சக்தியினால் இயக்கப்படுகின்றன. அங்கு காற்றுள்ள பகுதியும் உண்டு. எதுவுமற்ற வெளியும் உண்டு என்று ஒரு விஞ்ஞானியைப் போல பாடிக் கொண்டு போகின்றார்!

இத்தகைய உலகம் தோன்றியபோது ஓம் என்ற ஓசையே எழுந்தது! அதன் பொருள் தெரிந்து கொள்ளாமல் படைப்புத் தொழிலில் இருந்த பிரமா முருகனால் சிறை வைக்கப்பட்டபோது இறைவன் வந்து முருகனிடம் பிரணவ உபதேசம் பெற்றான் என்பதை எல்லாம் புழுதியில் வீசிவிட்டு, இந்து மக்கள் இருக்க அதையெல்லாம் ஓசைப்படாமல் எடுத்துச் சென்று பெருவெடிப்புக் கொள்கை (BIG BANG THEORY) என்று பெயரிட்டு ஆய்வு செய்தது நாசா!

இதிலே இந்துக்கள் தெரிந்து கொள்ள வேண்டியது ஓம் என்ற ஒலியின் பொருளை முருகன் காக்கும் தொழில் செய்யும் திருமாலிடம் கேட்கவில்லை! படைக்கும் தொழில் செய்யும் பிரமனிடம் தான் கேட்டான்! அணுக் கதிர்களை ஒன்றுடன் ஒன்று மோத வைத்து பிரபஞ்சத்தை உருவாக்கிய பிரமன் அவை மோதும் போது ஏற்பட்ட ஒலியைக் கவனிக்கத் தவறிவிட்டான் என்பது கந்தப் புராணமாக இருந்தாலும் அங்கே மனித குலம் கண்டறியாத மிகப்பெரிய உண்மையொன்று மறைந்து கிடக்கின்றது!

உலகில் இதுவரை நடந்த பெரும் விஞ்ஞான ஆராய்வுகளில் பெருவெடிப்புக் கொள்கையே முக்கியமானது. அதாவது, உலகம் எவ்வாறு தோற்றம் பெற்றது. அதன் போது என்ன நிகழ்வு இடம்பெற்றது என்பது பற்றிய ஆராய்வே இது.

சில ஆண்டுகளுக்கு முன்பு டாக்டர் ராபர்ட் வில்சன் என்கிற விஞ்ஞானியும் டாக்டர் பெஞ்சியாஸ் என்கிற விஞ்ஞானியும் மைக்ரோவேவ் ரேடியேசன் என்கிற நுண்கதிர் இயக்கம் பிரபஞ்சத்தில் எவ்வாறு செயல்படுகிறது என்கிற ஆராய்ச்சியில் ஈடுபட்டார்கள். அவர்கள் அணுக்கதிர்கள் ஒன்றுடன் ஒன்று மோதி வெடித்த போதுதான் இந்தப் பிரபஞ்சம் தோன்றியது என்று நிறுவ அவர்கள் முற்பட்டார்கள்! அவர்களின் சோதனையின் போது இனம் தெரியாத ரேடியோ அதிர்வுகள் தங்கள் சோதனையில் கிடைப்பதை உணர்ந்தார்கள்.

பலமுறை இந்த இனம்புரியாத ஒலி அதிர்வுகளின் ஓசையைப் பதிவு செய்து சத்தமாக்கி அந்த ஓசையைக் காது கொடுத்துக் கேட்டார்கள்! கதிர்கள் வெடிக்கின்றன! அப்போது ஓம் என்ற இனிய நாதம் ஒன்று எழுகின்றது! இந்த ஓசையை எங்கோ கேட்டிருக்கின்றேன் என்கிறார் டாக்டர் பெஞ்சியாஸ்! இது இந்துக்களின் உலக தோற்றத்துக்கு ஆதாரமான பிரணவ ஒலி என்கிறார் டாக்டர் வில்சன்.

இந்த உண்மையை எல்லாம் அவர்கள் எப்படி அறிந்து கொண்டார்கள். வியப்போடு மீண்டும் கேட்கின்றார் பெஞ்சியாஸ்! வில்சனிடம் இருந்து தீர்க்கமாக வருகின்றது அந்தப் பதில்: அவர்களுக்கு பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றிய எல்லா உண்மைகளும் தெரியும்!●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குரு அரவிந்தன்

# உயர்ந்த கோபுரங்கள் 7

இந்த ஈபெல் கோபுரம் பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகரில் அமைந்திருக்கிறது. இதைச் சிலர் ஐபெல் கோபுரம் என்றும் அழைப்பர். இது உல்லாசப் பயணிகளின் பிரபலமான சுற்றுலாத் தலமாகவும் விளங்குகின்றது. பாரிஸ் என்று சொன்னால் எல்லோர் மனக்கண் முன்னாலும் வந்து நிற்பது இந்த ஈபெல் கோபுரம்தான்.

இந்தக் கோபுரத்தை 1832ஆம் ஆண்டு பிறந்த ஈபெல் என்பவரே வடிவமைத்ததனால் 1671 படிக-ளைக் கொண்ட இந்தக் கோபுரத்துக்கு அவரது பெயரையே சூட்டியுள்ளனர். வருடந்தோறும் சுமார் ஐம்பது லட்சம் சுற்றுலாப் பயணிகள் இந்தக் கோபுரத்தைப் பார்ப்பதற்காக பாரிஸிற்கு வருகின்றார்கள். பாரிஸில் நடைபெற்ற உலகக் கண்காட்சி விழாவிற்கு நுழைவாயிலாக இந்தக் கோபுரம் 1887 இல் தொடங்கி 1889 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.



சுமார் 300 தொழிலாளர்களின் இரண்டு வருட கடின உழைப்பில் கட்டி முடிக்கப்பட்ட இந்தக் கோபுரம், சுமார் 986 அடி உயரமானது. 40 தொன்கள் வரையான வண்ணக்கலவை இந்தக் கோபுரத்திற்குப் பாவிக்கப்பட்டது. 1959இல் தொலைத்தொடர்பு அன்ரனாக்கள் கோபுரத்தின் உச்சியில் இணைக்கப்பட்டதால் அதன் உயரம் 1052 அடியாக உயர்ந்தது. சுமார் 18,000 உருக்குத் துண்டுகளைப் பொருத்தியே இந்தக் கோபுரத்தை அமைத்தார்கள். இதன் நிறை சுமார் 8092 தொன்களாக இருக்கின்றன. இந்த உருக்குத் துண்டுகளைப் பொருத்துவதற்கு சுமார் ஐந்து லட்சம் ஆணிகள் பாவிக்கப்பட்டனவாம்.

இந்தக் கோபுரத்தைக் கட்டுவதற்கு 1.5 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அன்று செலவாகின. வருடத்தில் எல்லா நாட்களிலும் இந்தக் கோபுத்தைச் சென்று பார்க்கக்கூடிய வசதிகளைச் செய்திருக்கின்றார்கள். உல்லாசப் பயணிகளிடம் இருந்து இதனால் பிரான்ஸ் நாட்டின் பொருளாதாரத்திற்கு நிறைய வருவாய் கிடைக்கின்றது. பாரிஸ் நகராட்சி மன்றத்தின் கட்டுப்பாட்டில் இந்தக் கோபுரத்தின் பராமரிப்பு இருக்கின்றது. சுமார் 500 தொழிலாளர்கள் இந்தக் கோபுரத்தில் கடமையாற்றுகின்றார்கள்.

1929ஆம் ஆண்டுவரை இந்த ஈபெல் கோபுரமே உலகில் உயர்ந்த கோபுரமாக இருந்தது. இந்தக் கோபுரம் வடிவமைக்கப்பட்டு தொடங்கிய போது பாரிஸில் உள்ள பலரிடம் இருந்து எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் இந்த எதிர்ப்புக்களைத் தாண்டி கோபும் கட்டி முடிக்கப்பட்டது. 20 வருடம் மட்டுமே, அதாவது 1909ஆம் ஆண்டுவரை மட்டுமே இந்தக் கோபுரம் பாவனையில் இருக்கும் என்ற நிபந்தனையும் அப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்தக் கோபுரம் காலப்போக்கில் உலகப்பிரசித்தி பெற்று விட்டதால் அதை உடைத்தெறியாமல் தொடர்ந்தும் பாதுகாத்து வருகின்றார்கள்.

1929இல் நியூயோர்க்கில் கிறிஸ்லெர் கட்டிடம் கட்டப்பட்டதால் ஈபெல் கோபுரம் அதி உயர்ந்த கோபுரம் என்ற தகுதியை இழந்தது. இந்த ஈபெல் கோபுரம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. முதலாவது தளம் சுமார் 189 அடி உயரத்திலும், இரண்டாவது தளம் சுமார் 379 அடி உயரத்திலும் மூன்றாவது தளம் சுமார் 905 அடி உயரத்திலும் இருக்கின்றன. முதலாவது தளத்தில் உணவு விடுதியும், நினைவுப் பொருட்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிறுவனமும், ஈபெல் கோபுரப் படம் போட்ட தபால்தலை விற்பனை செய்யும் தபாலகமும் முக்கியமாக இடம் பெற்றிருக்கின்றன. இரண்டாவது தளத்தில் உணவு விடுதி, கடைகள், தொலைநோக்கிக் கருவிகள் போன்றவை அமைந்திருக்கின்றன.

மூன்றாவது தளம்தான் மிகச் சிறந்த பார்வையாளர் தளமாக இருக்கின்றது. இரவிலும், பகலிலும் பாரிஸ் முழுவதையும் இங்கிருந்து பார்க்க கூடிய வசதிகளைக் கொண்டது. இரவிலே தங்கநிற மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட இந்தக் கோபுரம் பார்ப்பது மிகவும் அற்புதமாக இருக்கும். இரவில் அதன் அழகை இரசிப்பதற்-காகவே பலர் அங்கு வந்து இரவில் தங்கியிருந்து இரசிப்பதுண்டு. 1954ஆம் ஆண்டு ஒருவர் மலை ஏறுவது போல இந்தக் கோபுரத்தில் ஏறியிருந்தார். கோபுரத்தின் உச்சியில் இருந்து இருவர் பரசூட்டில் குதித்த சம்பவங்களும் உண்டு. இருபது வருடத்தில் தனது ஆயுட்காலத்தை முடிக்க இருந்த ஈபெல் கோபுரம் 1989ஆம் ஆண்டு தனது 100 வது ஆண்டைக் கொண்டாடியது மட்டுமல்ல, 125 வது ஆண்டைத் தொட்டு விட்டதும் பெரிய அதிசயமே! மனதில் பதிந்துவிட்ட மறக்க முடியாத கோபுரங்களில் பாரிஸில் உள்ள ஈபெல் கோபுரமும் ஒன்றாகும்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா மூர்த்தி

# கண்டதைச் சொல்கிறேன் 15

அடுத்த வருடம் தமிழர் தகவலின் 24வது விருது விழா நகர மண்டபத்தில் நடக்கும்போது ஒரு புதிய மாற்றம் நடந்து முடிந்திருக்கும். ஆம். இந்த மாத இறுதியில் நடக்கவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல் மூலம் புதிய மேயர் ரொறன்ரோவுக்கு தெரிவு செய்யப்பட்டிருப்பார்.

சென்ற மாதமே ரொறன்ரோ உள்ளூராட்சித் தேர்தல் முகப்புத்தகத்தில் பேசுபொருளாகிவிட்டது. குறிப்பாக மேயர் ரொப் போர்ட் திடீரென போட்டியிலிருந்து விலகிக் கொண்டமை பலருக்கும் ஒரு அதிர்வாக அமைந்தது. புற்று நோய் கண்ட அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதால் அதுவரை அவரைக் கடுமையாக எதிர்த்தவர்களும் அவர் நலம் பெறவேண்டும் என பிரார்த்தனை செய்ய ஆரம்பித்துவிட்டனர்.

அது தொடர்பில் ரொறன்ரோ தமிழ் முகப்புத்தக உலகும் தன் பதிவுகளை சூடாக வைத்திருந்தது. ஒரு நண்பர் தன் பதிவில் *'மேயர் ரொப் போர்ட் மிக அதிக அரசியல் வெற்றிகளையும் அதிக விமர்சனங்களையும் சந்தித்த, களங்கமில்லா, ரொறன்ரோ மிடில்கிளாஸ் மக்களின் எம்ஜியார்.'* என குறிப்பிட்டிருந்தார். பலரும் அதை ஆட்சேபித்து பதிவுகளை இட ஆரம்பித்தனர். *'இவனும் ஒரு ஆள். எம்ஜியாரோடு ஒப்பிடாதீர்கள்'* என ஒருவர் மறுதலித்தார். ரொப் போர்ட் *'மிடில்கிளாஸ் மக்களின் கவுண்டமணி"* என ஒருவர் திருத்தினார். *'எங்கள் வயிற்றில் அடித்தவன் உங்களுக்கு எம்ஜியாரா?"* என ஒரு பதிவு குமுறியது. *'போர்ட் யாருக்கும் வயித்தில் அடித்ததாக சரித்திரம் இல்லை. ஆனால் அட்டைகளாக பொதுப் பணத்தை உறிஞ்சிய ஆட்களை துரத்தியுள்ளது மட்டும்தான் எனக்குத் தெரியும்.* என இன்னொரு பதிவு திருப்பி அடித்தது.

எது எப்படி இருந்தாலும், பிரகாசமான வெற்றி வாய்ப்பைக் கொண்டிருந்த ரொப் போர்ட் மேயருக்கான போட்டியில் இனி இல்லை என்பதால் பலரும் அடக்கியே வாசித்தார்கள்.

மேயர் ரோப் போர்ட் போட்டியிலிருந்து விலகி தன் சகோதரன் டக் போர்ட்டை புதிய வேட்பாளராக்கிய பின்பு ஏற்கனவே களத்தில் இருந்த ஒலிவியா சோவும், ஜோன் ரோறியும் இன்னும் பலமாக முட்டி மோத ஆரம்பித்திருக்கிறார்கள். மூன்று பிரதான வேட்பாளர்களும் தம் பிரசாரத்திற்கு முகப்புத்தகத்தை பயன்படுத்துகிறார்கள் என்றாலும் ஜோன் ரோறியின் முகப்புத்தகம் தினசரி ஒரு புதுப் பதிவுடன் வருகிறது. அவர்கள் மட்டுமல்ல பல்வேறு 'வார்ட்டு'களில் கவுன்ஸிலர்களாகப் போட்டியிடும் நம் தமிழர்களும் முகப்புத்தகத்தை தத்தம் பிரச்சாரத்துக்கு நன்கு பயன்படுத்துகிறார்கள். (குறிப்பாக ராஜ் சுப்பிரமணியம்) பல சுவாரஸ்யமான பதிவுகள், படங்கள் என பலரது முகப்புத்தங்களும் நன்கு கலகலக்கிறன.

சென்ற மாதம் தமிழகத்தின் முகப்புத்தகங்களும் ருசிகரமாக இருந்தன. அவ்வாறிருந்த பலவற்றில் ஒன்றைக் குறிப்பிடவா? ஒரு தமிழ்ப்படத்தின் பாடல் வெளியீட்டு விழாவிற்கு ஹொலிவூட் நடிகரும் கலிபோர்னியாவின் முன்னாள் ஆளுனருமான ஆர்னால்ட் ஸ்வாஸ்நேகரை சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். அமைப்பாளர்கள் விழாவை இரண்டு மணி நேரம் தாமதமாக ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் ஆர்னானல்ட் வேளைக்கே வந்துவிட்டார். சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தாலும், இந்தத் தாமதத்தால் கடுப்பாகிய ஆர்னல்ட் பாதிநேரத்தில் நிகழ்ச்சியில் இருந்து எழுந்து சென்றுவிட்டார்.

அவ்வளவுதான். தமிழக முகப்புத்தகத்தவர்கள் அமைப்பாளர்களை முகப்புத்தகத்தில் ஒரு கை பார்த்துவிட்டார்கள். (இந்த அளவிற்கு கிண்டல் கமென்டுகள் கிடைக்கும் என்று தெரிந்திருந்தால் அமைப்பாளர்கள் நேர காலத்தோடு நிகழ்ச்சியை ஆரம்பித்திருப்பார்களோ?) அது ஒருபுறமிருக்க, சென்னை வந்த ஆர்னல்ட் தமிழக முதல்வரையும் சந்தித்தாரல்லவா.. அதைக் கிண்டலடித்து ஒருவர் *"அதிமுக கட்சி ஆளுங்க பழக்கதோசத்துல அர்னால்டு கைலயும் 200 ரூபாய் கொடுத்து மறக்காம ஓட்டு போட்ருன்னு சொன்னாங்களாம். அவரு வேற தொகுதி பாஸ்..."* என்ற காமடி பண்ணினார். அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா.

இனி இலங்கை அரசியல் குறித்து ஒரு பதிவு. ஐக்கிய தேசியக் கட்சியின் புத்திக்க பத்திரண ஒரு கூட்டத்தில் அங்கலாய்த்ததை நண்பர் ஒருவர் பகிர்ந்திருந்தார். *'அதி உன்னத நிர்வாக பீடமாகக் கருதப்படும் இலங்கை நாடாளுமன்றில் 225 பேர் அங்கம் வகிக்கிறார்கள். அவர்களுள் 94 உறுப்பி- னர்கள் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியெய்தாதவர்கள். மேலும் 142 பேருக்கு கல்விப் பொதுத் தராதர உயர்- தரப் பரீட்சையில் சித்தியெய்த தகுதியில்லாதவர்களாக இருக்கின்றார்கள்.'* என்றிருந்தது அப்பதிவு. அதற்கு இன்னொருவர் *'படித்தவர்களின் எண்ணிக்கை இலங்கை நாடாளுமன் -றத்தில் குறைவாக இருக்கிறது என்று நாம் இளக்காரமாக சிரிக்க முடியுமா? நமது தமிழ் அரசியல்காரர்களின் நிலைமை எப்படி இருக்கிறது?'* என்று பதில் இட்டிருந்தார். பலதரப்பட்ட கொமன்டுகள் வந்தன.

நானும் *'படித்தவர்கள் அரசியலுக்கு வரவேண்டும் என்ற சொல்வதைவிட அரசியலுக்கு வருபவர்கள் படித்தவர்களாக இருக்கவேண்டும் என்றுதான் சொல்லவேண்டும். ஒருவேளை அவர்கள் படித்தவர்களாக இல்லாத பட்சத்தில் போய்ப் படித்து தம்மை மேம்படுத்திவிட்டு அவர்கள் அரசியலுக்கு வரலாம். ஒன்றும் அவசரமில்லை. அதுவரை மக்கள் காத்திருப்பார்கள்.'* என்று இட்டிருந்தேன். அதற்கு ஒருவர் *'நீங்கள் வெளிநாடுகளில் இருந்து எதை வேண்டுமென்றாலும் சொல்லிக் கொண்டு கிடக்கலாம். ஆனால் தாயகத்தில் இருப்பவர்களுக்கு வாழ்க்கை ஒரு போராட்டம். அதை செப்பனிடுவது என்பது சுலபமானது அல்ல. நீங்கள் சொல்வதையெல்லாம் கனடாவில் முதலில் நடைமுறைப்படுத்துங்கள்'* என்றிருந்தார்.

உண்மைதான். தமிழீழம் கேட்பதற்கான காரணங்கள் இப்போதுதான் அதிகமாக இருக்கின்றன என்றாலும் அங்கு பயணம் வேறுபாதையில் தொடர்கிறது. அதை உறுதிப்படுத்துவதுபோல யாழ்ப்பாணத்திற்கு யாழ்தேவி வந்த செய்தியைக் கணிக்கலாம்.

அதுகுறித்து முகப்புத்தகத்- தில் ஒருவர் *'இன்று யாழ்தேவியை தண்டவாளத்தின் ஓரமெங்கணும் நின்று எம்மக்கள் வேடிக்கை பார்த்தாலும் அது ஆச்சரியப்படக்கூடிய விடயமல்ல. காரணம் இங்கே பலருக்கு படங்களில் மட்டுமே தொடருந்துப் பிரயாணத்தை பார்த்த அனுபவம். "வெறும் இரும்புக்கூடு எனினும் எத்தனைநாள் பார்த்தாலும் அலுக்காது - தொட்டுப் பார்த்தாலும் சுகமிருக்காது" என்று புதுவை இரத்தினதுரை அன்றைய யாழ்தேவியைப் பாடியதுபோல் இன்றைய யாழ்தேவியை இன்றைய மக்கள் பார்த்து ரசிப்பதொன்றும் அதிசயமில்லை.* என்றிருந்தார்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த எழுத்தாளர் அப்பாத்துரை முத்துலிங்கத்துக்கு மார்க்கம் நகரசபையின் சாதனையாளர் விருது

சர்வதேச ரீதியாகப் புகழ்பெற்ற மூத்த எழுத்தாளரான அப்பாத்துரை முத்துலிங்கம் அவர்களுக்கு மார்க்கம் நகரசபை கலை இலக்கியத் துறைக்கான சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. மார்க்கம் நகரசபையிடமிருந்து இந்த விருதினைப் பெற்ற முதலாவது தமிழ் எழுத்தாளர் இவரே. கடந்த மாதம் 15ம் திகதி நடைபெற்ற சிறப்பு வைபவமொன்றில் மார்க்கம் நகர முதல்வர் திரு. பிராங்க் ஸ்கார்பிற்றி இந்த விருதினை முத்துலிங்கம் அவர்களிடம் கையளித்தாரர். நகரசபை உறுப்பினர் லோகன் கணபதி விருதுபெறுநரை அறிமுகம் செய்து உரையாற்றுகையில் திரு. முத்துலிங்கம் அவர்களின் ஐம்பதாண்டு கால எழுத்துலகச் சாதனைகளை வியந்து கூறினார்.
(படமும் தகவலும்: மார்க்கம் நகரசபை)




## நீதன் சண் தேர்தல் பரப்புரை ஆரம்பம்







ரொறன்ரோ நகரசபையின் 42ம் வட்டாரமான ஸ்காபரோ றூஜ்றிவரில் அபேட்சகராகப் போட்டியிடும் நீதன் சண்ணின் பரப்புரை ஆரம்ப நிகழ்வும் நிதி சேகரிப்பு இராப்போசன ஒன்றுகூடல் நிகழ்வும் கடந்தமாதம் 21ம் திகதி பிரின்சஸ் விருந்துபசார மண்டபத்தில் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்படப் பல பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இதில் பங்குபற்றனர். ஆடலகம் மாணவியரின் நடன நிகழ்ச்சியும் இடம்பெற்றது. (படங்கள்: செய்தி.கொம் - குணா)

## நூலகவியலாளர் என். செல்வராஜாவுக்கு தமிழக கு.சின்னப்பபாரதி இலக்கிய விருது



கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாக இங்கிலாந்தில் வாழ்ந்தவாறு தமிழ்த்துறை ஆவணப்படுத்தலில் தீவிரமாக ஈடுபட்டு வரும் மூத்த நூலகவியலாளர் என். செல்வராஜாவுக்கு இந்தாண்டின் தமிழக கு. சின்னப்பபாரதி இலக்கிய விருது கிடைத்துள்ளது. இவரால் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்ற 'நூல்தேட்டம்' கட்டுரைத் தொகுப்புக்காக இந்த விருதும் பத்தாயிரம் ரூபா ரொக்கப்பரிசும் கிடைத்துள்ளது. கடந்த மாதம் ரொறன்ரோவில் வெளியிடப்பட்ட 'ஈழத்தமிழரின் போர்க்காலம்: இலக்கியங்கள்-ஆய்வுகள்-பதிவுகள்' நூலின் ஆசிரியரும் திரு. செல்வராஜா அவர்களே. தமது அறுபதாண்டு பூர்த்தி மணிவிழாவை இவர் இந்த மாதம் கொண்டாடும் இவ்வேளையில் இந்த விருது கிடைத்திருப்பது சிறப்பானதும் பொருத்தமானதுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தியாகி திலீபன்

# 27வது ஆண்டு நினைவுநாள்

1987ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்திடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த தியாகி திலீபனின் 27வது ஆண்டு நினைவை முன்னிட்டு, கனடியத் தமிழ் உணர்வாளர்களால் கடந்த மாதம் 26ஆம் திகதி ரொறன்ரோ கனடா கந்தசாமி கோயில் மண்டபத்தில் அடையாள உண்ணாவிரதம் இடம்பெற்றது. இதனையடுத்து அன்றிரவு எழுச்சிக் கலை நிகழ்வுகளும் இங்கு இடம்பெற்றன.






## அகிலன் 2

# 'ஈழத்தமிழரின்
# அகிலன் நினை









1989ம் ஆண்டு மே மாதம் பத்தாம் திகதி யாழ்நகரில் கொலை செய்யப்பட்ட யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியின் பல்கலைக்கழக புகுமுக வகுப்பு மாணவன் அகிலன் திருச்செல்வத்தின் 25வது ஆண்டு நினைவு நிகழ்வு இந்த மாதம் 7ம் திகதி கனடாவின் ரொறன்ரோவிலுள்ள கனடா கந்தசாமி ஆலய அரங்கில் நடைபெற்றது. இலண்டனில் வசிக்கும் நூலகவியலாளர் என். செல்வராஜா எழுதிய 'ஈழத்தமிழரின் போர்க்காலம் - இலக்கியங்கள், ஆய்வுகள், பதிவுகள்' என்னும் வரலாற்று ஆவண நூல் அகிலன் நினைவாக இங்கு வெளியிடப்பட்டது.

கவிஞரும் எழுத்தாளருமான பொன்னையா விவேகானந்தன் நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றினார். “இலங்கைத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை மையப் படுத்தி உலகளாவிய ரீதியில் வெளியான 250 வரையான நூல்களின் விபரங்களைக் கொண்ட இந்த நூல் அகிலன் நினைவாக வெளியிடப்படுவது மிகவும் பொருத்தமானது” என்று?தமதுரையில் இவர் தெரிவித்தார். திரு. செல்வா வெற்றிவேல் தம்பதிகளுக்கு நூலின் முதற் பிரதி வழங்கப்பட்டது.

கனடியத் தபால் திணைக்களம் வெளியிட்ட அகிலன் உருவம் பொறித்த தபால் தலையை 'கனடா உலகத் தமிழர்' பத்திரிகையின் ஆசிரியர் கமல் நவரட்ணம் வெளியிட்டு வைக்க, ஒன்ராறியோ புதிய ஜனநாயகக் கட்சியின் தவிசாளர் நீதன் சண்முகராஜா அதனைப் பெற்றுக் கொண்ட தோடு இருவரும் சிறப்புரை நிகழ்த்தினர்.

இந்திய இராணுவம் தமிழர் பகுதியை ஆக்கிரமித்திருந்த வேளையில் யாழ்ப்பாணம் 'முரசொலி' பத்திரிகையின் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றிய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25வது ஆண்டு நினைவு வைபவம்

## ன் போர்க்காலம்' இலக்கிய ஆவண நூலும்
## னைவு கனடிய தபாற்தலையும் வெளியீடு








திருச்செல்வம் அவர்களின் புதல்வரான அகிலன் கொலை செய்யப்பட்ட சூழலையும் அதன் பின்னணியையும் அப்போது முரசொலியில் பத்திரிகையாளராகக் கடமையாற்றிய வாசகன் ரட்ணதுரை தமது உரையில் விபரித்தார்.

இந்திய ராணுவமும் அதற்குத் துணைபோன துரோகக் கும்பலும் சேர்ந்து அகிலனைக் கொலை செய்ததை சர்வதேச மன்னிப்புச் சபை தனது ஆண்டறிக்கையில் பதிவு செய்துள்ளது.

அகிலனின் கல்லூரித் தோழரான இளங்குமரன் அகிலனின் கல்வி, விளையாட்டு, இலக்கியம் மற்றும் சமூகப்பணி உட்பட்ட பன்முக ஆற்றல்களையும் அதிதிறமை- களையும் கவி வடிவில் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தினார். செல்வி அனோஜினி குமாரதாசன் நிகழ்வினைத் தொகுத்து வழங்கினார். பஜனையுடன் ஆரம்பமான இந் நிகழ்வு 'வானம்பாடி' சிவாவின் பக்திப் பாடலையடுத்து தொடர்ந்து இரவுப் போசனத்துடன் நிறைவுற்றது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NOW HIRING
# JOIN OUR DYNAMIC TEAM



**Looking for a Career change?**
Freedom, Flexibility and Unlimited income potential

**Give us a Call today**

**Chandran Rasalingam** CHS
President & CEO
**Dir: 416 909 0400**

NFORCE LIFe

**Bus: 416 321 6000 x400**
www.inforcelife.com
career@inforcelife.com
10 Milner Business Court, Suite 707, Scarborough ON M1B 3C6
Like us on Facebook

printfast.ca

## Brimley Road Medical Centre
# WALK-IN CLINIC
## & FAMILY PRACTICE

**புதிய சேவைகள்**
- இதய மருத்துவச் சேவை (Heart Clinic - Echo, Stress Test, Holter & Consultation)
- சிறப்பு மருத்துவர்களின் சேவை (Specialists)
- புதிய பெண் குடும்ப மருத்துவரின் சேவை

✓ **புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்.**
✓ **ஆண், பெண் குடும்ப மருத்துவர்களுடன் 7 நாட்களும் சேவை.**

Dr. **சாந்தி முத்துலிங்கம்**, MD, CCFP
Dr. **உதயன் சோமசுந்தரம்**, MD, CCFP
Dr. **சுபாதினி செந்தில் மோகன்**, MD, CCFP
Dr. **நஸ்ரத் கான்**, MD, CCFP

| | |
|---|---|
| **MON - THU** | **9:00 - 7:00** |
| **FRIDAY** | **9:00 - 5:00** |
| **SAT & SUN** | **9:00 - 2:00** |

- **ஆய்வுகூடச் சேவை (Life Lab)**
- **மருந்தகச் சேவை (IDA Pharmacy)**
- **இயன் மருத்துவச் சேவை (Brimley Physiotherapy)**

*'We speak your language'*

# 416.412.3333

**3333 Brimley Road**
Scarborough, ON M1V 2J7
(Between **Steeles** & **McNicoll**)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு, வியாபார நிலையங்களை வாங்க விற்க

கனடியத் தமிழர் சமூகத்தில் நம்பிக்கையான ஒரு முகவர்

## கமல் நவரட்ணம்

அடமான (Mortgage) ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்





**Kamal** Navaratnam

Sales Representative

Direct: **416-303-7675**

E mail:kamalhomesale@gmail.com

## Buying / Selling / Leasing

**For buyers**

- Property for lower prices
- Top Negotiation
- Knowledgeable Advice
- Help with Mortgage
- Inspection & lawyers

**For Sellers**

- Free market Evaluation
- Highest value for your property
- Competitive Commission Structure
- Full MLS Exposure
- Free Home Staging
- Free Online, News Paper and Television Advertising
- Full Social Media Exposure
- Professional Photography – Feature Sheets, Virtual Tour, Video Tour & Visual Cards

**HomeLife/Future Realty Inc.**
Brokerage
205-7 Eastvale Drive
Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977
Fax: (905) 201-9229
Independently Owned and Operated

***Trust and reliable services***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**


**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB





# Computek College

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Est. 1991

www.computek.edu

We provide assistance for Second Career funded Applicants. E.I receiving /received, Maternity benefits received, WSIB, Ontario Works clients & New Immigrants welcome

**SECOND CAREER**

**You maybe eligible upto $28,000 to pay for:**

Living Expenses
Transportation
ChildCare
Books
Tuition and other

**Diploma Programs**

- Early Childcare Asst (ECA)
- Personal Support Worker (PSW)
- Medical Office Admin (MOA)
- Computerized Accounting
- Business Administration
- Application Development
- Network Engineering
- Enterprise Network Engineering

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

Not all the courses are available at all the locations




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ் 81



## தாமரைக் கண்ணனே தாலேலோ!

திருவாய்மொழி உட்பட, திவ்யப் பிரபந்தத் தொகுப்பில் உள்ள எல்லாப் பாடல்களும் (பாசுரங்களும்) 'பத்து' என்று சொல்லப்படும் பதிகங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. எல்லாப் பாடல்களும் திருமால் பக்தியின் பல பரிமாணங்களைப் பேசுகின்றன. இருந்தும் ஒவ்வொரு 'பத்து' க்கும் ஒரு குறிப்பிட்ட கருப்பொருள் (theme) உள்ளது. பத்தில் உள்ள அனைத்துப் பாடல்களும் அந்தக் குறிப்பிட்ட கருப்பொருளைச் சுற்றியே இருக்கும். முழுமையாக அந்தக் கருப்பொருள் தரும் அனுபவத்தில் திளைக்க இது வகை செய்கிறது.

பெரியாழ்வார் திருமொழியின் முதல் பத்தின் மூன்றாம் திருமொழி'மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி' என்று தொடங்கும் பத்துப் பாடல்களைக் கொண்டது.
ஒரு குழந்தைக்குத் தாயாக இருப்பது எளிது. தந்தையாக இருப்பது மிகக் கடினம். ஏன்?
தாய் என்பது இயற்கையாக இருப்பது. ஒரு தாய் தன் பிள்ளையை பத்து மாதம் வயிற்றில் சுமக்கிறாள். பின், தன் (அந்தக் காலத்துத் தாய்) குருதியைப் பாலாக்கி பிள்ளைக்குத் தருகிறாள். அவளுக்கும் குழந்தைக்கும் உள்ள தொடர்பு உயிர் சார்ந்தது, ஊன் சார்ந்த்து, உடல் சார்ந்தது.

தந்தை அப்படி அல்ல. தந்தைக்கும் பிள்ளைக்கும் ஒரு தொடர்பும் இல்லை. ஒரு தந்தை பிள்ளை மேல் வைக்கும் பாசம் மிகக் கடினமானது. அவன் மிகுந்த முயற்சி செய்ய வேண்டும். தாயின் அன்பைக் காட்டிலும் தந்தையின் அன்பு மிக மிக உயர்வானது.

பெரியாழ்வார் தன்னை கண்ணனின் தாயாகப் பாவனை செய்து பாடல்கள் எழுதி இருக்கிறார். அவ்வளவும் இனிமையான பாடல்கள்.

பெரியாழ்வாரின் திருமொழியில் எதைக் கொள்வது எதைத் தள்ளுவது என்பது பெரிய சிக்கலாக இருக்கிறது. எல்லாமே பால், தெளிதேன், பாகு, பருப்பு என இந்த நான்கும் கலந்த பண்டம் போல் தித்திக்கின்றன.

கண்ணனது திருமேனி அழகு எப்படி இருக்கிறது?

முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்னும்
தத்திப் பதித்துத் தலைப்பெய்தாற் போல் எங்கும்
பத்து விரலும் மணிவண்ணன் பாதங்கள்
ஒத்திட்டு இருந்தவா காணீரே
ஒண்ணுதலீர் வந்து காணீரே! ( திருமொழி 3 - பாடல் 24)

முத்தும் - முத்துக்களையும்
மணியும் - இரத்நங்களையும்
வயிரமும் - வஜ்ரங்களையும்
நல்பொன்னும் - மாற்றுயர்ந்த பொன்னையும்
தத்திப்பதித்து - மாறிமாறிப்பதித்து
தலைப்பெய்தாற்போல் - சேர்த்தாற்போலே
எங்கும் - திருமேனியெங்கும்
மணிவண்ணன் - மணிபோன்ற வர்ணத்தை யுடையனான கண்ணனுடைய
பாதங்கள் - திருவடிகளிலுள்ள
பத்து விரலும் - விரல் பத்தும்
ஒத்திட்டிருந்ஆ - ஒன்றோடொன்றெத்து அமைந்திருக்கும்படியை காணீர்!
ஒன் நுதலீர் - ஒளிபொருந்திய நெற்றியையுடையீர்காள்! வந்து காணீர்!

இந்தப் பாடலுக்கு மணிப்பிரவாள நடையில் ஸ்ரீ காஞ்சி பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியார் விளக்க உரை எழுதியுள்ளார்.

முதலடியில் சில இரத்னங்களைச் சொன்னது நவரத்னங்களுக்கும் உபலக்ஷணம். கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன நவரத்தினங்களாம். கால்களுக்கு இடுகின்ற செம்பஞ்சு மருதாணி என்பனபோல ஸ்ரீகிருஷ்ணனுடைய பாதங்களில் ஒன்பது விரல்களுக்கு நவரத்ன வர்ணத்தையும் மற்றொரு விரலுக்குப் பொன்னிறத்தையும் யசோதை இட்டு 'என் மணிவண்ணனுடைய பாதங்களில் பத்து விரலும் - நவரத்னங்களையும் நல்ல பொன்னையும் ஒளிவிளங்க மாறிமாறிப் பதித்து வைத்தாற்போலச் சேர்ந்தனவாய் லக்ஷணங்களில் குறையொன்றுமில்லாமலிருப்பதை வந்து பாருங்கள் என்கிறாள்.

பொதுவாக எல்லோரும் இறைவனிடம் பொன் வேண்டும் பொருள் வேண்டும் பெண் வேண்டும் நல்ல உடல்நலம் வேண்டும் என்று கேட்பார்கள்.

இரட்டைப் புலவர்கள் போல் சிலர் இறைவனைத் திட்டவும் செய்வார்கள். உனக்கு எவ்வளவு பூசை செய்கிறேன் அர்ச்சனை செய்கிறேன், அபிசேகம் செய்கிறேன் எல்லாம் செய்தேன், என்னை ஏன் இப்படி சோதிக்கிறாய், உனக்கு கண் இல்லையா, காது இல்லையா உன் மனம் என்ன கல்லா என்று வைபவர்களும் உண்டு.

இறைவன் உண்டென்பார், இல்லை என்பார் நமக்கில்லை கடவுள் கவலை என்று என்னைப் போல் இருப்பாரும் உண்டு.

இந்தப் பாடல்களைப் படிப்பதால் தமிழின் சுவையை விட வேறு என்ன பயன்?
வானவெளியில் சிறகடித்துப் பறக்கும் சோலைக் கிளி, அழகிய மயில், பாடும் குயில், கடிமலர் வண்டு, காதோரம் கவிதை பாடும் தென்றல், காலோரம் கதை பேசும் கடல் அலை, பால் போல் நிலவு, விரல் பிடிக்கும் பச்சை குழந்தையின் பிஞ்சுக் கைகள், வாசம் வீசும் தாமரை மலர்.. .....இவற்றை எல்லாம் பார்பதால் என்ன பயனோ அதே பயன்தான்.

இறைவனை தொட்டிலில் இட்டு தாலாட்டித் தூங்கப் பண்ணுகிறார் ஆழ்வார்....இறைவனுக்கு தாய் இல்லை என்ற குறையை போக்குகிறார்...இந்தப் பத்துப் பாடல்களில் திருவாய்ப்பாடியில் எம்பெருமான் கண்ணன் பிறந்திருந்த போது அவனை தாலேலோ பாடி யசோதை தாலாட்டியதைக் கூறுகிறார் பெரியாழ்வார்.

மாணிக்கம் கட்டி வயிரம் இடை கட்டி
ஆணிப்பொன்னால் செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணியுனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக்குறளனே தாலேலோ!
வையம் அளந்தானே தாலேலோ! (3 ஆம் திருமொழி - பாடல் 44)

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கங்களை இருபுறமும் கட்டி இடையில் வயிரங்களைக் கட்டி மாற்றில்லாத ஆணிப்பொன்னால் செய்த அழகிய சிறிய தொட்டிலை மிகவும் விருப்பமுடன் பிரமன் உனக்காகத் தந்தான்! உன்னுடைய உடைமைகளை இரந்து பெறுவதற்காக குள்ள மாணவனாக வந்த கண்ணனே தாலேலோ!

உன்னுடைமைகளான மூவுலகங்களையும் பெற்ற மகிழ்ச்சியில் திரிவிக்கிரமனாக வளர்ந்து உலகங்களை எல்லாம் அளந்தவனே தாலேலோ!

மேலும் ஒரு தாலாட்டுப் பாட்டு.

என் தம்பிரானார் எழில் திருமார்வர்க்கு
சந்தம் அழகிய தாமரைத் தாளர்க்கு
இந்திரன் தானும் எழிலுடைக் கிண்கிணி
தந்துவனாய் நின்றான் தாலேலோ
தாமரைக்கண்ணனே தாலேலோ (3 ஆம் திருமொழி - பாடல் 46)

என் தலைவனான அழகிய திருமார்பை உடைய, மணமும் விரிவும் நிறமும் அழகிய தாமரையைப் போல் உள்ள திருவடிகளை உடைய உனக்கு மூவுலகங்களுக்கும் தலைவனான இந்திரனும் அழகினை நிலையாக உடைய கிண்கிணியைத் தந்து உன் பெருமையை எண்ணி விலகி நிற்காமலும் உன் எளிமையை எண்ணி அணுகி நிற்காமலும் தகுந்த தொலைவில் உவனாக நின்றான் தாலேலோ! தாமரைக் கண்ணனே தாலேலோ!

அவன் என்று சுட்டும் படி விலகி நிற்கவில்லை. இவன் என்று சுட்டும் படி அணுகி நிற்கவில்லை. உவன் என்று சுட்டும்படி தனக்குத் தகுந்த தொலைவில் இந்திரன் நின்றான்.

ஆணிப்பொன் - மதிப்பில் உயர்ந்த பொன் தூய பொன் மாற்றுப்பொன் (பொன்னின் தரத்தை மதிப்பிடப் பயன்படும் ஒப்பீட்டுப் பொன்)

இந்தப் பாடலை பி. உன்னிகிருஷ்னன் நீலாம்புரி இராகத்தில் பாடியிருக்கிறார். கீழேயுள்ள முகவரியில் கேட்டு மகிழுங்கள்.
http://punnikrishnan-priya-sisters.blogspot.ca/2012/09/man-ickam-katti-vayiram-idaikatti.html

(வளரும்)●


தாய் வீடு
THAIVEEDU HOME & LIVING

சனி 18 OCTOBER 1:30 pm
சனி 18 OCTOBER 6:00 pm
ஞாயிறு 19 OCTOBER 4:00 pm

தாய்வீடு
பத்திரிகை நடத்தும்
அரங்கியல் விழா

York Woods Library Theatre
1785 Finch Ave W, Toronto
416-857-6406
info@tamilartsgroup.com

Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer

Scotiabank® You're richer than you think.®

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

# உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்













- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

Chapel Ridge

FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng

Funeral Counsellor

**416-431-3600** Ext:1

Call: **Christeen Seevaratnam**

Funeral Counsellor

**416-431-3600** Ext:2






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








வாங்குவதும் விற்பதும் சுலபமே ஆனால்..
தெளிவான தெரிவே உங்கள் வெற்றிப்படி.


## *Why think so long...?*




- Free market evaluation
- Professional advice on selling your home for more
- State of the art marketing idea
- Flexible commission
- Friendly service producing excellent results
- List through me to have your property sold in a few days

Mortgages & loans arrangements

**Homelife/Future**
Realty inc. Brokerage
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated






# கோவில் மாலைகள் மற்றும் பூஜை பொருட்கள்

**5633 Finch Ave East, Unit # 6, Scarborough, ON M1B 5K9**
**(416) 288-1419**

**சொரி பூக்கள், சரம் மற்றும் பூஜைக்கு தேவைப்படும் இலை வகைகள்**

| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 2.00/ M | அறுகம் புல் | $ 3.00/bag |
| உள்ளூர் கார்னேஷன் சரம் | $ 2.00/M | வில்வம் இலை | $ 3.00/bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 5.00/M | வேப்பிலை | $ 3.00/bag |
| கார்னேஷன் மலர்கள் | $ 0.20 each | Marukhalundu /Maru | $ 3.00 /bag |
| மல்லிகை மலர்கள் | $ 5.00/bag | மாவிலை | 10 per $ 1.00 |
| சம்பாகினி மலர்கள் | $ 3.00 /bag | வெற்றிலை | 10 per $ 1.00 |
| அரலி மலர்கள் | $ 3.00 /bag | வாழை இலை | $ 1.00 each |
| தாமரை மலர்கள் | $ 1.00 each | துளசி இலை | $ 3.00/bag |

Fancy Florist





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'குறமகள்' வள்ளிநாயகி இராமலிங்கம்

# எங்கள் இந்திரப் பிரஸ்தம் 2

துவாபர யுகத்தின் இறுதியில் நடந்த மகாபாரதப் போரின் நிகழ்ச்சிகளோடு, கலியுகத்தின் இருபதாம் நூற்றாண்டில் நடந்த "இலங்கையின் தமிழீழப் போராட்டத்தையும் ஒப்பிட்டு பார்ப்பது சுவாரஸ்யமாக இருக்கும்.

குருவம்ச அரசர்களால் ஆளப்பட்டு வந்த அத்தினாபுர அரசு பல குறுநில மன்னர்களை உள்ளடக்கியது. அது ஒரு சாம்ராஜ்ய அந்தஸ்தைப் பெற உதவியாக இருந்தவர் பிதாமகர் பீஷ்மர் எனும் தேவவிரதன்.

இலங்கை முழுவதும் அந்நியர் ஆட்சிக்கு உட்பட்ட அந்தக் காலத்தில் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் கல்வி, கேள்வி, அறிவு, ஆற்றல், உழைப்பு முயற்சிகளில் வல்லவர்களாக, கிறிஸ்தவ சமயப் பிரசாரகர்களால் கூர்மை அடைந் - திருந்தனர். இவர்களுள் சேர். பாலசிங்கம், சேர். பொன்னம்பலம் ஆகியோர் முக்கியம் பெற்றனர்.

சேர். பொன் இராமநாதன் பரம்பரையினரின் செல்வாக்கால், இலங்கையின் இருப்பை வெளிநாடுகளுக்குப் பரப்பும் கைங்கரியத்தால் இராமநாதன் அவர்களே பீஷ்மர் அந்தஸ்தைப் பெறுகிறார்.

அரசியலில் சிரத்தை அற்றவர்களாயும் அதிக உடல் உழைப்பு தேவைப்படாத வளம் செறிந்த பகுதியில் வாழ்ந்தமையாலும் சிங்கள இனம் தாமும் தம்பாடுமாக வாழ்ந்து வந்தது.

சுதந்திரம் பெற வேண்டிய அவசியத்தை உணர்ந்து அவர்களுக்கும் அரசியல் உணர்வை ஊட்டுவதற்காக இராமநாதன் அரும்பாடுபட்டு அவருள் சிலரை அரசியலுக்குள் புகுத்தினார், அந்த பீஷ்மர்.

எப்படி பாண்டுவுக்குக் கிடைக்க வேண்டிய அரசர் பதவி திருதராட்டினனுக்குச் சென்றதோ அவ்வண்ணமே சொலமன் பண்டாரநாயக்க செல்வாக்கு பெற்றார். அதனால் சிங்களவரும் அரசியல் பற்றிய முக்கியத்துவத்தை அறியத் தொடங்கிவிட்டனர்.
அத்தினாபுர இளவரசர்களுள் பாண்டு புத்திரர்கள் ஐவர் கௌரவ புத்திரர்கள் நூற்றொருவர். இவர்களுள், பாண்டு புத்திரர்கள் ஆற்றல் மிக்கவர்கள், தர்ம வழி நடப்பவர்கள், எல்லோரையும் நேசிப்பவர்கள். தங்கள் உரிமைகளையும் விட்டுக் கொடுப்பவர்கள். கௌரவர் நூற்றொருவர் பெரும்பான்மையினராக விளங்கினாலும் பாண்டவர் மீது பொறாமையும் கோபமும் வெறுப்பும் கொண்டவர்கள். அதர்ம வழிகளையும் கையாள்பவர்.

இலங்கைச் சிங்கம் என வெளிநாட்டாராலும் அறியப்பட்ட இராமநாதன் அமைச்சராக இருந்த காலத்தில் கப்பற் போக்குவரத்து, புகையிரதப் பாதை முதலியவற்றை காங்கேசன்துறை, பருத்தித்துறை வரை கொழும்பிலிருந்து அமைப்பதற்குத் திட்டங்கள் தீட்டினார்.

இவை அனுராதபுரம் வரையும், புத்தளம் வரையுமே நீட்டப்பட்டு மிகுதி கிடப்பில் போடப்பட்டன.

இலங்கையின் ஆட்சிபீடமான சட்டசபையில் சேர். பாலசிங்கம் தொடர்ந்து தலைமைப் பதவி வகித்து வந்தார். பண்டாரநாயக்கா சட்டசபைக்கு வந்ததும் இலங்கையின் நிர்வாகத்தை வேலைப்பளு காரணமாக பிரிக்க வேண்டுமெனக் கூறி வடக்குப் பகுதிக்கு நிர்வாகத் தலைமை பாலசிங்கத்துக்கே உரியதென அவரை வடக்குக்குள் முடக்கி விட்டார்கள்.

அத்தினாபுர அரசும் பாண்டவரது உரிமையை ஏற்றுக் கொண்டு அப்பிரதேசத்தை இரண்டாகப் பிரித்து காண்டகவனப் பிரதேசத்தை பாண்டவருக்குக் கொடுத்தனர். பீஷ்மருக்கும் சில குறுநில மன்னர்களுக்கும் அநியாயமாகப்பட்டாலும் பொறுமையின் உறைவிடமான தர்மன் ஏற்றுக் கொண்டான். சகுனியே அதனை முழுமையாக ஆதரித்தான். ஏனெனில் காந்தார நாட்டை விரிவாக்கம் செய்யும் தன் நோக்கம் நிறைவேறுவதற்கு அத்தினாபுரத்தோடு சூதாட்டத்தால் கட்டி எழுப்பப்பட்ட காண்டக வனமும் தன்னாட்சிக்கு வந்து தான் ஒரு மாமன்னனாக வரலாம் என்பதே அக்கபடமாகும்.

பண்டாரநாயக்காக்களும் சேனநாயக்காக்களும் தம்மை வருத்துகிறார்களே என வெளிநாடுகளுக்கு முறையிட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நோர்வே சமாதான குழுவின் ஆலோசனையோடு அயல்நாட்டு உதவியை நாடுகிறார்கள். அயல்நாடோ மற்றைய அயல் நாடுகளோடு சிநேகம் பூண்டு வல்லரசு என பட்டம் பெறும் நோக்கோடு தென்பகுதி தமிழரோடும், வடபகுதி சிங்களவரோடும் கைகுலுக்கிக் கொண்டனர் ஜெயவர்த்தனாவும் தமிழரசுக் கட்சியினருமே.

பாண்டவரை ஒடுக்க ஆயுதப் போட்டி, சூதாட்டப் போட்டி, அரக்குமாளிகை, வனவாசம், அஞ்ஞானவாசம், வாரணாவதம் எனும் முறைகளைக் கையாண்டனர்.

இலங்கையிலும் பிரஜாவுரிமை, விகிதாசாரத் தொழில் வாய்ப்பு, அரச கரும மொழியறிவு, தரப்படுத்தல் போன்ற பல ஒடுக்குமுறைகள். தரப்படுத்தல் மூலம் கல்வியில் கைவைத்தமை மாணவர் மத்தியில் ஒரு வேகத்தைக் கொடுத்தது. தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகளால் அயல்நாட்டை மீறி ஒன்றும் செய்ய முடியவில்லை.

காண்டகவனப் பிரதேசத்தை அழித்து இந்திரப் பிரஸ்தம் அமைக்கத் தேவதச்சன் மயன் என்பவருக்கு ஒப்பந்தம் கொடுக்கப்பட்டு வனம் எரியூட்டப்பட்டது.

காந்தி வழியில் மறியல் போராட்டம் சத்தியாக்கிரகம் உண்ணாவிரதம் எனத் தொடர்ந்தபோது இராணுவம், ஆகாயப் படை, கப்பலால் பீரங்கித் தாக்கம் எனத் தமிழ்ப் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டது.

காண்டகவனம் எரியும்போது அதன் உள்ளிருந்த சில நச்சுப் பாம்புகள், நரிகள், விலங்குகள், வேறும் உயிரினங்கள் தப்பியோட மற்றவை எரிந்து போயின. ஆனால் முனிவர் அருள்பெற்ற ஒரு பறவைக் கூடு (சாரங்கப் பறவை) அதில் சிறகு முளைக்காத குஞ்சுகள் தப்பி இருந்தன. தாய்ப் பறவை வெளியே சென்று உணவு தேடிவந்து குஞ்சுகளுக்கு ஊட்டும்.

நோர்வே சமாதானக் குழுவின் அனுமதி பெற்ற தாய்ப் பறவையான அன்ரன் பாலசிங்கம் இளைஞர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தார். தங்கள் நிலையை நன்குணர்ந்து, நம்மை நாமே ஆளும் நிலை வரவேண்டும் என்று

இளைஞர் மத்தியில் ஒரு மக்கள் தலைவன் தோன்றினான். பாயும் புலியின் கொடியை உயர்த்தினான்.

குறுநில மன்னர்கள் பலர் அத்தினாபுரத்தோடு சேர, விராடம், பாஞ்சாலம் போன்றவை பாண்டவரோடு ஒத்து நின்றன.

தமிழ் பகுதிகளுள் விடுதலைக்காகப் போராடுவோம் என புற்றீசல் போல் பல

(மறுபக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் இந்திரப்...

இயக்கங்கள் தோன்றின. தம்முள்ளேயே போட்டி பொறாமையால் ஒன்றையொன்று அழித்தும், காட்டிக் கொடுக்கும் தன்மையால் சிங்கள அரசுடன் சேர்ந்தும் அழிந்து போயின. தக்கது வாழும் நிலையில் மக்கள் தலைவன் ஒருவனே ஆனான்.

கர்ணன், சுசர்மன், பூரிசிரவஸ், ஜயத்ரதன், சல்லியன் என்னும் குறுநில மன்னர்கள் அத்தினாபுரத்தைச் சேர்ந்தவர்கள். இவருள் ஜயத்திரதன் உறவினன். சல்லியன் மாத்திரை வழியால் பாண்டவரின் மாமன். தன்னை முறையாக பாண்டவர் வரவேற்கவில்லை எனும் காரணத்தால் துரியோதனனால் கனம் பண்ணப்பட்டு அவனுடன் சேர்ந்தவர் சல்லியன்.

அரசுக்கு பொருளாதார வளம் சேர்க்கும் இடமாக இதுகாறும் தமிழீழம் பயன்பட்டு வந்தது. விவசாய நிலமெல்லாம் துறைமுகத்துக்காக - பெரிய வைத்தியசாலை கட்டுவதற்காக - விமான நிலையத்தை சர்வதேச நிலையமாக இராணுவத் தளமாக மாற்றுவதற்காக என பெரும்பகுதி நிலம் சுவீகரிக்கப்பட்டது. மக்களுக்கும் இவ்விடத்தில் தொழிலும் கொடுத்து, பணமும் கொடுத்து மனிதவலுவையும் பெற்றுக் கொண்டது சிங்கள அரசு.

இவை அனைத்துமே மாணவன் மக்கள் தலைவனுக்குப் புரிந்துவிட்டது. மக்கள் சக்தியால் வெல்ல முடியாததால் ஆயுதப் போராட்டமே சிறந்தது என இரகசியமான முறையில் வெளிநாடுகளோடு தொடர்பு கொண்டு எங்கள் இந்திரப் பிரஸ்தத்தை உருவாக்கும் செயல் தொடங்கியது. சிங்கள அரசின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு சுரங்கங்கள் அமைத்து தமிழரின் இந்திரப்பிரஸ்தம் உருவாகியது. சல்லியன்களும் ஜெயப்பிரதனும் கூட முட்டுக்கட்டை போட முயன்றாலும், ஆற்றல் வாய்ந்த மக்கள் தலைவனை தடுக்க முடியவில்லை.

உலகின் மூலைமுடுக்கெல்லாம் அகதிகளாக சென்ற தமிழ் மக்கள் தம் உழைப்பின் பெரும் பகுதியை எங்கள் இந்திரப்பிரஸ்தமான தமிழீழத்துக்கே அனுப்பி வருகின்றனர். 30 ஆண்டுப் போராட்டம் 18 வருட தனி தமிழீழ ஆட்சி. இதுவே எங்கள் இந்திரப்பிரஸ்த ஆட்சி.

தர்மனின் ஆட்சி 36 வருடம் நடைபெற்றது. மகாபாரத யுத்தத்தோடு குருவம்சமே அழிந்துபோன நிலையில் அபிமன்யுவின் ஆட்சி தொடங்கியது. பிறப்பால் அவன் மகன் யாதவ குலத்தவனானான். பாரதம் முழுவதும் அவன் குடைக்கீழ் பரீட்சித்து மகாராஜாவின் ஆட்சி தொடங்கவும் கலியுகம் ஆரம்பமாயிற்று.

அதேமுறையில் நடைபெற்ற தமிழீழப் போராட்டம் உலகின் மூலைமுடுக்கெல்லாம் பரந்துவிட்ட தமிழர் பரம்பரை முப்பது ஆண்டுக்குள்ளேயே அந்தந்த நாடுகளின் அரசாங்கங்களில் அங்கம் வகிக்கத் தொடங்கிவிட்டனர். இத்தகைய அரசியல் ஈடுபாடு பாரதம் மாத்திரமல்ல உலக அரசாங்கத்தையே அமைக்கக்கூடிய நிலை வரவும் கூடும். மக்கள் தலைவனின் புகழும் அவனது ஒவ்வோர் துறைக்கும் நியமிக்கப்பட்ட ஐந்து தளபதிகளும் ஒரு இதிகாசத்தையே உருவாக்குவார்கள்.●






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# R & S AUTO SALES

Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

**36 வருட அனுபவம்**



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற

Radha

**R & S Auto Sales Inc.**
**Radha Motor Inc.**

3030 Markham Road
Scarborough, ON

**416-412-3838**
**416-836-5825**




எஸ். காந்தி

# வெள்ளிப் பணம்

89

வெள்ளிப்பணத் தொடர் இம்முறை Google நிறுவனத்தினைப் பற்றிய தகவலாக அமையப் போகின்றது. இந்த நிறுவனத்தினைப் பற்றி எல்லோருக்கும் முழுமையாகத் தெரியாவிட்டாலும் இதனுடைய சேவையைப்பற்றி, தெரியாத தகவல்கள் இருக்கமுடியாது. கணினியை இதுவரை பாவித்திராத யாராவது இருந்தாலும்கூட, ஒரு தமிழ்ச் சினிமாவில் பாடலாக 'கூகுள் கூகுள்' பண்ணிப்பார்த்தேன்" என்று தொடங்குகின்ற பாடல் மூலமாகவும் சிலர் Google என்றால் என்ன என்பதனை அறிய முனைந்திருப்பார்கள்.

எப்படியிருப்பினும் கூகுள் என்பது கணினியுடனும் இணையத்துடனும் தொடர்புடையதாகும். இன்று வீட்டில் இருந்துகொண்டு கணினியில் இன்ரநெற்றுக்குச் சென்று Google என்கின்ற ஆறு ஆங்கில எழுத்துக்களை ரைப் செய்து உங்களுக்கு வேண்டிய தகவல்களைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருகிறது. அதனால்தான் இதற்கு தேடும் இயந்திரம் (Search Engine) என்ற ஆங்கில அகராதியில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக இதன் வரலாற்றினைப் பார்க்கும்போது கலிபோர்ணியாவிலுள்ள Stanford பல்கலைக் கழகத்தில் முனைவர் (Phd) பட்டத்திற்கான கல்வியை மேற்கொண்டிருந்த Larry Page, Sergey Brin என்கின்ற இரு மாணவர்களின் கூட்டு முயற்சியால் 1996ஆம் ஆண்டு பங்குனி மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் இவர்களின் இந்த புதிய கண்டுபிடிப்புகளும் ஆய்வுகளும் ஆரம்ப கட்டத்தில் இருந்திருக்கின்றது. அப்பொழுது இவர்கள் இதற்கு வைத்த பெயர் "Back Rub" ஆகும்.

1997ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இதற்கு Google என்கின்ற பெயர் சூட்டப்பட்டது. 1998ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இது ஒரு பொதுக் கம்பனியாக (Incorporated) மாற்றப்பட்டது. இருப்பினும், 5 வருடங்களின் பின்னர்தான் அது பங்குகளை விற்க ஆரம்பித்தது. அதாவது 2004ஆம் ஆண்டு ஆவணி மாதம் பங்குகளை விற்க ஆரம்பித்தபோது, அதன் விலை 85 டாலர்களாக இருந்தது. இக்கட்டுரை எழுதிக்கொண்டிருக்கும்போது அதன் விலை 569 டாலராகக் காணப்படுகின்றது.

இந்த நிறுவனத்தின் 2013ஆம் ஆண்டின் வருமானம் 59.825 பில்லியன் டாலராகும். இது 2012ஆம் ஆண்டு 50.175 பில்லியனாகக் காணப்பட்டது.

இது வைத்திருக்கின்ற சொத்துகளின் (Assets) பெறுமதி 2013ஆம் ஆண்டில் 110.92 பில்லியனாகும். 2012இல் இது 93.798 பில்லியன் ஆகும்.

இங்கு தொழில் புரிபவர்களின் எண்ணிக்கை 2007ஆம் ஆண்டு 16,805 ஆகவும், 2010இல் இது 24,400 ஆகவும், இந்த வருடம் ஜுன் மாதப் பகுதியில் 52,069 ஆக இருப்பதாகவும் புள்ளிவிபரம் கூறுகின்றது.

பொதுவாகப் பாரக்கும்போது, அமெரிக்காவின் தேசிய பொருளாதாரத்தில் கணிசமான பங்கை வகிப்பதுடன் உலக ரீதியாக எல்லா நாடுகளும் இதன் சேவையைப் பெற்றுக்கொள்ளும் நிறுவனமாகக் காணப்படுவதும் இதன் சிறப்பு அம்சமாகும்.

தொழில்நுட்ப, விஞ்ஞான ரீதியான அறிவியலும், சமுதாய நலன்களுக்கான புதிய விடயங்களைக் கண்டுபிடிப்பதும் அறிவியல் சார்ந்த (Knowledge Base Economy) பொருளாதாரத்தின் முக்கிய அம்சம் என்பதற்கு இந்த நிறுவனம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
416 321 6420





• Vertical blinds
• Venetian blinds
• Draperies
• Curtains
• Shutters

உங்கள் இல்லங்களை மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்


## வெள்ளைக் கோட்...

செயற்பாடே மனஅழுத்தத்தை அதிகரித்து பிரஸரைக் கூடுதலாகக் காட்டக் கூடிய அபாயம் உள்ளதையும் மறுப்பதற்கில்லை.

24 மணிநேர கண்காணிப்பு (24-hour blood pressure monitoring)

ஒரு சிறிய டிஜிட்டல் முறை கருவியை தொடர்ந்து 24 மணிநேரம் அணிந்து கொள்ள வேண்டும். அது தொடர்ந்து உங்கள் பிரஸர் அளவுகளை தனது மெமரியில் பதிவு செய்து வைத்திருக்கும்.

நீங்கள் செய்யக் கூடியவை எவை?

• நீங்களாக உங்களுக்கு வெள்ளைக் கோட் உயர் இரத்த அழுத்தம் இருப்பதாகத் தீர்மானிக்க வேண்டாம். மருத்துவர் தெளிவாகக் கூறினால் அதற்கு அடிப்படைக் காரணம் மனப் பதற்றமே ஆகும். எனவே அதைத் தணிக்க முயல வேண்டும்.
• பிரஸர் நோய் பற்றிய அர்த்தமற்ற மனக்கலக்கத்தை கைவிட வேண்டும்.'இன்று பலருக்கும் இந்நோய் உள்ளது. இதற்கான நல்ல மருந்துகள் உள்ளன. அதைத் தவிர எடையை சரியான அளவில் பேணுதல், தினசரி உடற்பயிற்சி செய்தல், உணவில் உப்பைக் குறைதல், அமைதியான வாழ்க்கை முறை போன்றவற்றால் அதைக் குறைக்க உங்களாலும் முடியும் என்பதை உணர்ந்து கொள்ளுவதால் பதற்றம் நீங்கும்.
• யோகாசனம், தியானம், உடல் மனத்தளர்ச்சிப் பயிற்சி போன்றவற்றை செய்யுங்கள். இவை யாவும் உங்களது மனதைத் திடமாக்க உதவும்.
• மருத்துவரிடம் செல்லும்போது தெளிந்த அமைதியான சிந்தையுடன் செல்லுங்கள்.
• மருத்துவமனைக்குச் சென்றவுடன் அவசர அவசரமாக மருத்துவரின் அறைக்குள் நுழையாதீர்கள் சற்று ஆறி இருங்கள். காத்திருக்கும் அறையில் ரீவி இருந்தால் அதில் சற்று மனத்தைதச் செலுத்துங்கள்.

வெள்ளைக் கோட் உயர் இரத்த அழுத்தம் என்பது பிரச்சனை அற்றது எனப் பொதுவாக நம்பப்பட்டாலும், கவனத்தில் கொள்ள வேண்டியதும் கூட எனப் பல மருத்துவர்கள் கருதுகிறார்கள். ஏனெனில் உண்மையான உயர் அழுத்தம் எதிர்காலத்தில் வருவதற்கான முதல் சமிக்கையாக இது இருக்கலாம் என்பதே ஆகும்.

வெள்ளைக் கோட் உயர் இரத்த அழுத்தம் என்பது மறைந்திருக்கும் உயர் இரத்த அழுத்தமாக (masked hypertension) இருக்கலாம் என்பதையும் மறுப்பதற்கில்லை. அதாவது பிரஸரானது சில தருணங்களில் சரியான அளவிலும் வேறு சில தருணங்களில் அதிகரித்தும் இருக்கலாம். இவ்வாறு இடையிடையே அதிகரித்துக் குறைவதும் காலகதியில் பின்விளைவுகளைக் கொண்டு வரலாம். எனவே எதற்கும் உங்கள் வாழ்க்கை முறைகளை ஆரோக்கியமானதாகக் கடைப்பிடிப்பது அவசியம்.●


ALL COUNTRIES - WWW.TAMILSYELLOWPAGE.COM
WWW.ENGLSIHYELLOPAGE.COM WWW.ASIANYELLOPAGE.COM
CANADA & INTERNATIONAL BUSINESS WEBSITE DIRECTORY
A1 CANADA → JOB AGENCY & COURIER SERVICE • A1 COLOMBO → DIGITAL PHOTO STUDIO
A1 CEYLON → FINANCIAL SERVICE & MORTGAGE • ALL COUNTRIES → TOUR SERVICE
ST-FRANCIS → PHOTOGRAPHY & VIDEOGRAPHY • MORE & MORE & Etc
TAMILYP@gmail.com - ENGLISHYP@gmail.com - ASIANYP@gmail.com
416 644 7273 416 752 4444 416 613 2919
2296 EGLINTON AVE, EAST @ BIRCHMOUNT RD - UNIT 3 LOWER LEVEL- SCARBOROUGH - TOR - ONT - M1K 2M2 - CANADA




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைக்கில்லைக்
கள்ளச் சிந்தை" - ஔவையார்

களங்கம் இல்லாத குணமுடையவனுக்கு, வஞ்சனையான எண்ணம் தோன்றுவது இல்லை. அவருடைய உள்ளம் பளிங்கு போன்று இருக்கும். இவர்கள் உள்ளுவதெல்லாம் உயர்வானவை. மறந்தும் பிறன் கேடு உள்ளாதவர்கள். உள்ளுதல் - நினைத்தல். இந்தத் தூய உள்ளம் உள்ளவர்கள் உள்ளத்தை அப்படியே கூறுவர் மறைக்க மாட்டார்கள். உள்ளத்தைக் கூறுவது வேறு, உள்ளதைச் சொல்வது வேறு. ஒளிவு மறைவின்றி உள்ளதை உள்ளபடி கூறுவர். மனம் வெளிப்படையாகத் தொழிற்படும். மாசுமறுவற்ற பளிங்கு போன்றது இவர்கள் உள்ளம். உள்ளம் - மனம். மனம்போல வாழ்வு என்பர். உண்மை. மெய் உள்ளத்தோடு தொடர்புடையது.

உண்மையின் எதிர் பொய். பொய் சொல்லக் கூடாது பாப்பா எனப் பாடியவர் பாரதி. பொய் மெய் இவை தாண்டி வாய்மையும் இருக்கு. வாயோடு தொடர்புடையது வாய்மை. இது தீமையிலாத சொல் என வள்ளுவர் இலக்கணம் கூறினார். பொய்யுமல்ல, மெய்யுமல்ல. ஒருவன் மனைவியைக் கொலை செய்யத் துரத்திக் கொண்டு போகிறான். வழியிலே ஒருவரைக் கண்டு "இதாலை ஒரு பெண்பிள்ளை போகிறாளா" எனக் கேட்கிறார். அப்பெரியவர் அப்பெண் போன திசையைக் கண்டவர். அந்நேர நிலமைக்கேற்ப, வேறு திசையைக் காட்டி, அப்பக்கம் போனதாகப் பதற்றமின்றிக் கூறினார். பெண் தப்பி விட்டாள். இதுதான் வாய்மை. பொய்யன்று. உள்ளத்தைச் சொல்வது. இந்த நிலைகள் எல்லாவற்றையும் கடந்த ஒரு உள்ள நிலை. எல்லாரும் இதைச் செய்ய மாட்டார்கள். "உடையது விளம்பேல்" என்பது இன்னோர் உபதேசம். ஆக இவற்றையெல்லாம் கடந்த புனிதமான தூய மனோதர்மம்தான் உள்ளத்தைச் சொல்வது. "உள்ளது சொல்லல் உண்மை. உள்ளத்தைத் திறந்து பேசுவது எவர்க்கும் முடியாத அதியுயர்ந்த நிலை அன்றோ!

மனம், வாக்கு, காயம் திரிகரணங்கள். இவை மனமும், செயலும், சொல்லும் ஒன்றாகத் தொழிற்படல்.



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# உள்ளத்தைச் சொல்

சொல், செயல், மனம் மூன்றும் ஒன்றித்து நிற்கும். நல்லதை சிந்தித்து நல்லதையே சொல்லி, நல்லதையே செய்யும் நிலை. மனம் நினைவும் சொல்லும் செயலும் வேறுபடாது ஒன்றித்து நிற்கும் நிலை இது. மனம், வாக்கு, காயம் வேறுபடாது ஒன்றித்து நிற்கும் நிலை. இறைவன், சொல்லை ஒத்துச் செயல் மனமும் தூயவர்க்கே தோற்றுவான். மனம் நினைப்பது, வாய் சொல்வது, தேகம் தொழிற்படுவது வெவ்வேறாய் அமையாது. இதனுள்ளே அமையுமா உள்ளத்தைச் சொல்லுதல். ஓரளவுக்குப் பொருந்துமெனினும் மனம் தராசு போன்று சமநிலையில் நிற்கும் ஞானி உள்ளத்தைச் சொல்ல முன்வரலாம். எவராலும் இதைச் செயல்படுத்த முடியாது வெட்ட வெளிச்சமாய். ஒளிவு மறைவின்றி சொல்பவரே உள்ளத்தைச் சொல்பவர். கடுகளவும் மறைக்காத நிலை இது. துர்லபம். செய்வது மெத்தக் கடினம். கடினத்திற் கடினம்.

ஆக, உண்மை, மெய்மை பற்றிச் சிறிது சிந்திப்போம். வள்ளுவர் கூற்றின்வழி சிந்திப்போம்.

காந்தியடிகள் தனது பிழைகளை, குற்றங் குறைகளை, தப்புகளை மனந்திறந்து எழுதியுள்ளார். இதேபோல, கவியோகி சுத்தானந்த பாரதியாரும் வெளிப்படுத்தியிருக்கிறார். மகான்களின் மனோலயங்கள் உள்ளும் புறமும் ஒன்றாகவே அமையும். மறைக்கவோ மறுக்கவோ சந்தர்ப்பம் இல்லை. 'உள்ளத்தைச் சொல்' என்ற கூற்று மிகமிக ஆழமானது. செம்பொருள் காண்பது அறிவு, நுண்பொருள் காண்பது அறிவு, மெய்ப்பொருள் காண்பது அறிவு. வாய்மை பற்றி வள்ளுவர் என்ன கூறுகின்றார் என அவதானிப்போம். மனச்சான்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வது சிறந்த கண்ணோட்டமாம்.

தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சேதன் னைச்சுடும் 293

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமைநன்று 297

புறத்தூய்மை நீரானமையும் அகத்தூய்மை
வாய்மையாற் காணப்படும் 298

அரியகற்று ஆசற்றார் தண்ணுத் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு 503

வெண்மை னி அறியாமை

கற்றற்குரிய நூல்களைக் கற்று மேற்சொல்லிய
குற்றங்கள் அற்றார் மாட்டுத் தெரியுங்கால் - ஆரா
யும்போது வெண்மை இல்லாமை அரிது - பரிமேலழகர்

எனவே ஆன்றவிந்த டங்கிய கொள்கைச் சான்
றோர் இது பற்றிச் சிந்திப் பார்களாக

எல்லாந் தெரிகிறது. சொல்லத்தான் முடியாமை முன்னிற்கிறது.

அப்படியொருநிலை சம உள்ளங்களில் ஏற்பட்டால்
உலகில் அமைதி சாந்தி சமாதானம் சந்துஷ்டி
ஏற்படுமா? சிந்திப்போம் செயலாற்றுவோம்.

ஒன்றையே எண்ணு
ஒன்றையே செய்
ஒன்றாகப் பார் வேறாகப்
பாராதே. பிறர்
நலம் எம்நலம்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Neethan Shan

**Strong Voice! Better Choice!**


Candidate - City Councillor
Ward 42, City of Toronto

www.neethanshan.ca
info@neethanshan.ca
416 287 9292

**On Oct 27th, 2014, Elect Neethan Shan for:**

- Improved and Expanded Transit
- Focused Economic Development
- Accessible and Transparent City Government
- Innovative Civic, Social and Recreational Programs
- Enhanced Community Safety
- Collaborative Environmental Protection

Strong Voice! Better Choice!



# லோகன் கணபதி

**மார்க்கம் 7 ஆம் வட்டாரம் - கவுன்சிலர் வேட்பாளர்**

- 72 மில்லியன் டாலர் செலவில் சன சமூக நிலையமும் நூலகமும்!!!
- மார்க்கம் வரவுசெலவுக் குழுவின் உபதலைவராக -2009, 2010, 2012 சோலைவரி அதிகரிக்காமலும் (0% Tax Increase), அதன் பின் வருடங்களில் GTA யிலேயே மிகக் குறைந்த அளவு அதிகரிப்பு!
- 15 இற்கும் மேற்பட்ட புதிய பசுந்தரைகள்!
- முதல் கிறிக்கெட் மைதானம்!
- முதன் முதலாக தமிழர் மரபுரிமை நாட்கள் பிரகடனம்!
- வன்னி வீதி!!! ட்ரிங்கோ வீதி!!! யாழ் சீடாவூட் பார்க்!!!
- இனஒழிப்பு, படுகொலையை எதிர்த்து தீர்மானம் மார்க்கம் மாநகர சபையில் நிறைவேற்றம்!!!
- ஸ்டீல்ஸ் வீதி விஸ்தரிப்பு!!!
- மார்க்கம் இந்தியா வர்த்தகத் தூதுக்குழு உறுப்பினர்!









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HERITAGE
Education Funds

**RESP**
**SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**


உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

**Personal Income Tax**
**Small Business Income Tax**
**Computerized Returns**

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer


**416. 841. 1866**
**416. 955. 9303**
E.mail: ganthiy@rogers.com

# துன்னாலை-கரவை மக்கள் மன்ற விழா



துன்னாலை-கரவை மக்கள் மன்றத்தின் பன்னிரண்டாவது ஆண்டு 'ஞானதீபம்' கலைமாலைப் பொழுது கடந்த மாதம் 13ம் திகதி மார்க்கம் பரோக் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. கனடாவில் பிறந்த இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்தவர்களின் நிகழ்ச்சிகள் பெருமளவில் இங்கு மேடையேறின. விழாவின் பிரதம விருந்தினராக திரு. இராமலிங்கம் அமிர்தலிங்கம் பங்குபற்றினார். (படமும் தகவலும்: வே. விவேகானந்தன்)

# பிளமிங்டன் தமிழ்க் கல்வி நிலைய விழா



வாணி பாலா அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வரும் பிளமிங்டன் தமிழ்க் கல்வி நிலைய பத்தாம் ஆண்டு நிறைவு விழா கடந்த மாதம் 14ம் தகிதி ஸ்காபரோ நகர மண்டபத்தில் நடைபெற்றது. தமிழ் கற்பதற்கான இரண்டு பயிற்சி நூல்கள் இங்கு வெளியிட்டு வைக்கப்பட்டன. கலாநிதி இ. பாலசுந்தரம், திரு எஸ். திருச்செல்வம், குரு அரவிந்தன், மீரா இராசையா, சுந்தரராஜன் நேசானந்தர், க. யோகநாதன், இளையபாரதி ஆகியோரின் உரைகளும், மாணவர் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# இரண்டு நூல்கள் மலிவு விலையில்


கனடாவில் வசிக்கும் பெரும் புலவர் முஹமத் ஹன்ஸீர் அவர்களின் இரண்டு நூல்கள் இப்போது ரொறன்ரோ புத்தக விற்பனை நிலையங்களில் மலிவு விலையில் விற்கப்படுகின்றன. 'திருவள்ளுவரது வாழ்க்கை வரலாற்று ஆய்வும் திருக்காவியமும்' என்னும் நூல் பத்து டாலர்களுக்கும், அண்மையில் வெளியான 'வானொலி ஊடகவியல்' நூல் பத்து டாலர்களுக்கும் பின்வரும் இடங்களில் கிடைக்கும்.

முருகன் புத்தகசாலை - 416 321 0285
கலைமகள் புத்தகசாலை - 416 921 5018
சோதிடர் நந்தகுமார் - 416 588 2492

இந்நூல்களின் விற்பனையில் கிடைக்கும் பணம் அடுத்து வரவிருக்கும் தமது 'இந்திய தத்துவம்' என்னும் நூல் வெளியீட்டுக்குப் பயன்படுத்தப்படுமென நூலாசிரியர் தெரிவிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


# FREE ! Real Estate Classes




## Successful Real Estate Office With
## Over 300 Salespeople

TOP 5 HOMELIFE OFFICE IN CANADA 2012

TOP 6 HOMELIFE OFFICE IN CANADA 2011

TOP 7 HOMELIFE OFFICE IN CANADA 2010

★No Franchise Fees ★No Monthly Fees ★No Desk Fees

## International Award Winning Office

### Top 5th HomeLife Office In Canada-2012

- Atractive Commission Split.
- Over 300 Salespersons.
- Daily Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week

HOMELIFE HIGHER STANDARDS



**HOMELIFE /FUTURE REALTY INC.,** Brokerage
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
**Bus: 905.201.9977 | 416.264.0101**

*Based on TREB data: 2012. (does not include independent or other franchisors). ©2012 HomeLife Realty Services Inc. All Rights Reserved.Each Office is Independently Owned and Operated. Not intended to solicit Agents or Brokers currently under contract.

*INDEPENDENTLY OWNED AND OPERATED*

**Selva Vettyvel**
*Broker of Record*
**Tel:416-568-4301**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org